விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 014 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 18 வெள்ளிக்கிழமை (02.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## மருதங்கேணியில் குடும்பஸ்தர் குத்திப் படுகொலை



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் குடும்பஸ்தர் ஒருவர் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் மருதங்கேணி வீரபத்திரர் கோவிலை அண்மித்த 02ஆம் பக்கம் பார்க்க

### தையிட்டியில் போராட்டம்

## வலி.வடக்குப் பிரதேச சபையின் 11 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை


(யாழ்ப்பாணம்)

தையிட்டி திஸ்ஸ விகாராதிபதியின் பதவி உயர்வுக்கு எதிராக விகாரைக்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்ட வலிகாமம்வடக்கு பிரதேச சபையின் 11 உறுப்பினர்களுக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தினால் அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் பலாலிப் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கின் 16ஆம் பக்கம் பார்க்க

# கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயப் பகுதியில்

## தொல்லியல் திணைக்களத்தால் அகழ்வுப்பணி



(திருகோணமலை)

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயம் இருந்த பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினால் அகழ்வுப்பணி மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

(02ஆம் பக்கம் பார்க்க)

### புத்தாண்டில் சோகம்

## கேகாலையில் மூவர் கொலை

(கேகாலை)

கேகாலை மாவட்டத்தின் மாவனெல்லை பகுதியில் 2 பெண்கள் உட்பட 3 பேர் ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டு 15ஆம் பக்கம் பார்க்க

### லாஃப்ஸ்

## சமையல் எரிவாயு விலை அதிகரிப்பு

(கொழும்பு)

லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோ கிராம் 15ஆம் பக்கம் பார்க்க

### தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு முன்

## சட்டவிரோதக் கட்டிடம் என பலகை நாட்டினால் நடவடிக்கை

### வலி.வடக்கு தவிசாளருக்கு பலாலி பொலிஸார் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தீர்மானத் திற்கமைய தையிட்டி திஸ்ஸ ரஜமகா விகாரை முன்பாக சட்டவிரோத கட்டிடம் என பெயர் பலகை நாட்டினால் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என பிரதேச சபை செயலாளருக்கு பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரதேச 15ஆம் பக்கம் பார்க்க

## தலதா மாளிகையில் ஜனாதிபதி அநுர வழிபாடு





15ஆம் பக்கம் பார்க்க

### மண்டைதீவில் அமையவுள்ள

## சர்வதேச விளையாட்டு மைதானப் பணிகளை

### பார்வையிட்டார் அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் மண்டைதீவில் அமையவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானப் பணிகளை நேற்று 15ஆம் பக்கம் பார்க்க

## தேசிய கல்வி நிறுவகத்தின்

### பணிப்பாளர் பதவி விலகல்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய தரம் 6 ஆங்கில பாடத் தொகுதி தொடர்பான விசாரணை நிறைவடையும் வரை 15ஆம் பக்கம் பார்க்க

## பருத்தித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில்

### லஞ்ச் சீற் பயன்படுத்தத் தடை மீறினால் அபராதம்

(பருத்தித்துறை)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நகரசபை எல்லைக் குட்பட்ட உணவகங்கள் மற்றும் உணவுகளை கையாளும் நிலையங்களில் உள்ளகப் பயன்பாடு மற்றும் உணவுப் பொதியிடல் உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளின் போதும் லஞ்ச் சீற் பயன்படுத்துவதற்கான தடை 02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது ஒலிக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா கனகராயன்குளத்தில்
# கிணற்றில் விழுந்த தம்பதியர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா, கனகராயன்குளம் பெரியகுளம் பகுதியில் இருவர் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளனர்.

நேற்றிரவு சுமார் 9.00 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் அதே பகுதியைச் சேர்ந்த கணவன் மனைவி என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்துத் தகவல் அறிந்த அயலவர்கள் மற்றும் உறவினர்கள் விரைந்து செயற்பட்டு அவர்களை மீட்க முயற்சித்த போதிலும், துரதிர்ஷ்டவசமாக இருவரும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளன.

(ம-7)

## திருவெண்காட்டில் திருவாசக முற்றோதல்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 7.30 மணிக்கு திருவாசக முற்றோதல் ஆரம்பமாகும்.

(ந)

## மருதங்கேணி...

பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஜெனிற்றா என்பவரின் கணவரான தவனேசன் (வயது-40) என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நபர் ஒருவர் மது போதையில் கொலையுண்ட நபரது வீட்டுக்கு முன்னால் நின்று கூச்சலிட்டுக் கொண்டிருந்துள்ளார்.

இந்நிலையில் கொலையுண்ட நபர் மது போதையில் கூச்சலிட்டவர் வெளியேறிச் சென்றுவிட்டார் என்று கருதி மருதங்கேணிப் பகுதிக்குச்சென்றுகொண்டிருக்கும்போது கூச்சலிட்டவர் வழிமறித்து கத்தியால் குத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கத்திக் குத்துக்கு இலக்கானவரை மருதங்கேணி மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது அங்கு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ம-7,60)


## கடை வாடகைக்கு உண்டு

மானிப்பாய் வீதி ஒட்டு மடச் சந்தியில் இருந்து 100m தூரத்தில் 3 கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு.

12 அடி அகலம், 27 அடி நீளம்

(6457)

தொடர்புகளுக்கு:

077 411 8851, 076 882 8694


## பருத்தித்துறை...

நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது.

முன்னதாக உணவகங்கள் மற்றும் உணவுப் பொருட்களைக் கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

குறித்த அறிவிப்பை மீறிச் செயற்படுபவர்கள் மீது நீதிமன்றத்தினூடாக நேரடியாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பருத்தித்துறை நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் தெரிவித்தார்.

லஞ்ச் சீற் பாவனைக்கு மாற்றீடாக உள்ளகப் பயன்பாட்டில் வாழையிலை, தாமரை இலை, தேக்கம் இலை போன்றவற்றையும் உணவுப் பொதியிடலின் போது ஈயக்காகிதம் மற்றும் உணவுப் பொதியிடலுக்காக அனுமதிக்கப்பட்ட கொள்கலன்களைப் பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ம-7)

## கன்னியா...

குறித்த பகுதியில் அகழ்வுப் பணியை மேற்கொண்டு ஆய்வுகளைச் செய்வதற்காக தொல்லியல் திணைக்களத்திற்கு தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையிலேயே குறித்த பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அத்துடன் குறித்த பகுதியில் பாரிய புத்தர் சிலை ஒன்று அவசர அவசரமாகத் திறந்து வைக்கப்பட்டிருந்தமையும் பாரிய விமர்சனங்களை எழுப்பியுள்ளது.

கன்னியா வெந்நீரூற்றை அண்மித்த பகுதியில் தனியார் காணியில் அமைக்கப்பட்டிருந்த மாரியம்மன் அறக்கட்டளைக்குச் சொந்தமான 200 வருடங்கள் பழமையான பிள்ளையார் ஆலயமானது 2002ஆம் ஆண்டு காலப் பகுதியில் புனருத்தாரனப் பணிக்காக உடைக்கப்பட்டபோது தொல்லியல் திணைக்களத்தினால் அப்பகுதி தொல்லியலுக்கு உரியது என அடையாளப் படுத்தப்பட்டிருந்தது.

பின்னர் குறித்த பகுதியில் பௌத்த விகாரை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாகக் கூறி குறித்த காணியின் உரிமையாளரும், பிள்ளையார் ஆலயத்தின் அறங்காவலருமான கோகிலரமணி என்பவரால் திருகோணமலை மேல் நீதிமன்றில் 29.07.2019 அன்று வழக்குத் தொடரப்பட்டதைத் தொடர்ந்து குறித்த பகுதியில் பௌத்த விகாரை கட்டுவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டதுடன் பிள்ளையார் கோவில் கட்டுவதற்காக கன்னியா வெந்நீரூற்றின் நுழைவுப்பகுதியின் இடது பக்க மூலையில் 10 பேர்ச் காணி வழங்கப்பட்டிருந்தது.

1623 - 1638 ஆண்டு வரை பறங்கிய படைத் தளபதியாக இருந்த நபரால் மடத்தடி மாரியம்மன் ஆலயத்திற்கு நன்கொடையாக கொடுக்கப்பட்ட ஒரு பிரதேசமே கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலயம் என்பதும் பல ஆவணங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(ம-7)


## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 24-09-1980

விண்ணில் 02-01-2016

### அமரர் கெங்கேஸ்வரன் தீபா

எங்கள் ஆருயிர் செல்லமே...!
நீ எமை விட்டுப் பிரிந்து பத்து ஆண்டுகள்
ஆகிவிட்டதம்மா.
நேற்றுப்போல் இருக்கிறது.
பத்து ஆண்டுகள் என்ன?
எங்கள் உயிர் உள்ளவரை
உனை மறவோம்.
நினைத்து நினைத்து
தினம் தினம் வெதும்புகிறோம்.

உமது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, கணவன்,
மகள் [illegible]
சகோதரர், சகோதரிகள்.

4ம் வட்டாரம்,
முள்ளியவளை.

(C-4730)



## லைடன் புடவை நிலையம் - யாழ்ப்பாணம்

தைப்பொங்கலை முன்னிட்டு எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் விசேட விலைத் தள்ளுபடிகளில் உங்களுக்கான ஆடைகளைப் பெற்றுக் கொள்ள உடனே விரையுங்கள்.



| | |
|---|---|
| 3 சாரம் (Saram) | - 985 /= |
| 3 சட்டை (Frock) | - 2500/= |
| 3 சேலை (Saree) | - 1000/= |
| 1 பெரிய சுவிட்டர் | - 1000/= |
| 1 குளிர் மேலங்கி (Jaket) | - 750/= |
| 1 சேட் - அரைக்கை (Shirt S/S) | - 1000/= |
| 1 சேட் - முழுக்கை (Shirt L/S) | - 1250/= |
| 5 ரீசேட் (Tshirt) | - 1000/= |
| 5 பெனியன் (Banion) | - 1000/= |
| 3 சொக்ஸ் | - 300/= |
| சிறிய சுவிட்டர் | - 750/= |
| 3 பிரா (Bra) | - 1000/= |
| 1 நைட்டி (Nighty) | - 500/= |



14.01.2026 மட்டுமே

### Leyden Textile Center

410, Hospital Road, Jaffna. 021 222 2381

(C-4729)



## 23 வது ஆண்டை நோக்கி

### RAVEENS EMC KARAVEDDY (ENGLISH MEDIUM)

(Most Prominent Institution for ENGLISH MEDIUM in Srilanka)

- ஆரம்பம் : 03.01.2026 சனிக்கிழமை
- தரம் 6க்கான வகுப்புகள் (கல்வி மறுசீரமைப்புக்குரியது)
- தரம் 10ல் 3 மாணவர்களுக்கு அனுமதியுண்டு

தொகுதிப் பாடங்கள் :

01.English Literature | 02.ICT | 03.Commerce

SRILANKA and RAVEENS EMC Both are CLEAN

P.Easwaranathan (Director)

(C-4728)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரும்போக நெல் கொள்வனவுக்காக விசேட சலுகைக்கடன் திட்டம்

(கொழும்பு)

சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை வட்டியிலான கடன் வழங்கும் திட்டமொன்று நேற்று முதல் அமுலுக்கு வருவதாக நிதிய மைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதைய பெரும்போக பருவத்தில் நெல் கொள்வனவு நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்கில் இந்த கடன் சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் ஆண்டுக்கு 7 சதவீத சலுகை வட்டி விகிதத்தில் அதிகபட்சமாக 50 மில்லியன் ரூபா வரை கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறாகப் பெறப்படும் கடன்தொகையை 180 நாட்களுக்குள் மீளச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. (நி)

## 40 கிராமிய வீதிகளில் இ.போ.ச பேருந்து சேவைகள்

(கொழும்பு)

பொருளாதார ரீதியாக இலாபமற்ற 40 கிராமிய வீதிகளில் பேருந்து சேவைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

போக்குவரத்து சிரமங்களை எதிர்நோக்கும் பொது மக்களின் வசதிக்காக, இந்த சேவை முன்னெடுக்கப்படுவதுடன், பாதீட்டு முன்மொழிவின் கீழ் இதற்காக 2 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிசு செரிய, கெமி செரிய மற்றும் நிசி செரிய ஆகிய திட்டங்களுக்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 3 ஆயிரத்து 300 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, இதுவரை பேருந்து சேவைகள் இல்லாத 40 இலாபமற்ற கிராமிய வீதிகளில் இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

## வீதி விபத்தில் ஐவர் பரிதாபமாக உயிரிழப்பு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் இறுதி நாளான டிசெம்பர் 31 ஆம் திகதி இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் குறைந்தது ஐவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் உந்துருளிகளில் பயணித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (8)

## யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தால் மலையக மக்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினால் அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட பேரிடரினால் பாதிக்கப்பட்ட மலையக உறவுகளுக்கு பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதியான கற்றல் உபகரணங்கள் மற்றும் உடு புடவைகள் என்பன கடந்த 21,22 ஆம் திகதிகளில் வழங்கி வைக்கப்பட்டன.

நிறுவன நிறைவேற்று உத்தியோகத்தர் ந.சுகிர்தராஜ் தலைமையிலான பணியாளர்கள் நேரடியாக பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று வழங்கியிருந்தனர்.

பதுளை மாவட்டத்தில் ஸ்பிரிங்வெளி மேல்நிலை மற்றும் கீழ்நிலை பகுதியில் 270 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் நுவரெலியா மாவட்டத்தில் உடு புடவைகள், கற்றல் உபகரணங்கள் மற்றும் சத்துமா என்பனவும் ஐக்கிய இலங்கை நலன்புரி அமைப்பு ஊடாக மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (8)



கட்டைக்காடு சென்மேரிஸ் நாடக மன்றத்தால் துயர் சுமந்த கரைகள் என்னும் இறுவெட்டு கடந்த டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்டது. (படம்-மகாலிங்கம்)

# வரி ஏய்ப்பு செய்தால் சட்டம் பாயும்!

### எச்சரிக்கை விடுத்த ஜனாதிபதி அநுர

**(கொழும்பு) இலங்கையில் எவரேனும் வரி ஏய்ப்பு செய்தால் அவருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.**



யாராவது வரி ஏய்ப்பு செய்தால், அவர்களின் பதவியைப் பொருட்படுத்தாமல் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை ஆய்வு செய்த போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் வாகன இறக்குமதியை நிறுத்தவே முடியாது என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

டித்வா சூறாவளியின் பின்னர் வாகன இறக்குமதி நிறுத்தப்பட்டதாகவும், அந்தப் பணம் பேரிடருக்கு பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனவும் சிலர் கூறுகின்றனர்.

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கும் பேரிடர் நிவாரணம் வழங்குவதற்கும் பணம் இருப்பதால் வாகன இறக்குமதியை நிறுத்த முடியாது என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரல் மாதத்தில் நாடு சரிந்துவிடும் என கூறியுள்ளனர். ஆனால் பொருளாதார காரணிகள், ஏற்றுமதி, சுற்றுலா, வெளிநாட்டு இடப்பெயர்வு மற்றும் வெளிநாட்டு உதவி என அனைத்தும் அதிகரித்த ஆண்டாக 2025ஆம் ஆண்டு அமைந்துள்ளது. 2025இல் வாகனப் பழுது பார்ப்புக்காக 25 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. யார் என்ன சொன்னாலும் அரச சேவை வாகனக் குழு புதுப்பிக்கப்படுகிறது.

வாகனங்களை இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளோம். நாங்கள் அதைச் செய்கிறோம். சிலர் அதை நிறுத்திவிட்டு அந்தப் பணத்தை இந்தப் பேரழிவிற்காக பயன்படுத்துமாறு அறிவுரை வழங்கியுள்ளனர்.

குறித்த இரண்டு செயற்பாடுகளுக்கும் எங்களிடம் போதுமான நிதி உள்ளது. சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைய இறைவரித் திணைக்களத்திற்கு அனைத்து வரிப் பணமும் கிடைப்பதில்லை.

வரிகள் எவ்வாறு ஏய்ப்பு செய்யப்பட்டன என்பதையும் நாங்கள் அறிவோம். ஏய்ப்பு வரலாறு எங்களுக்குத் தெரியும். ஒரே இரவில் வரி திருத்தங்களின் வரலாறு உள்ளது. அவை தணிக்கை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இது ஒருபோதும் நடக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒரு தனிநபர் அல்லது ஒரு துறையை குறிவைத்து யாராவது தங்கள் குடும்ப உறவுகள், அரசியல் தொடர்புகள் அல்லது அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் வரிகளைத் திருத்தமாட்டார்கள். ஒன்றாகப் போராடுவோம். சட்டங்கள் போதாது என்றால், சட்டங்களை வலுப்படுத்துவோம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் அலுவலகம் திறந்து வைப்பு





(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மகளிர் விவகாரம் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் அலுவலகத் திறப்பு விழா, யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நேற்று முன்தினம் புதன் கிழமை அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் அமைச்சின் அலுவலக பெயர்ப்பலகையை பிரதம செயலாளர் தனுஜா முருகேசன் திரைநீக்கம் செய்து வைத்தார். அதேவேளை, அமைச்சின் புதிய கட்டடத்தை கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் திறந்து வைத்தார்.


குறித்த நிகழ்வில், வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற "நிறு த்த அர்ப்பணம்" வரவேற்பு நடனம் மற்றும் வேல் கொண்டு வினை தீர்க்கும் கந்தா பொம்மலாட்டம் நிகழ்வும் சிறப்புற இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ் மாநகர சபை உறுப்பினர் சுந்தரமூர்த்தி கபிலன் மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## நீருக்கடியில் சதுரங்கப் போட்டி
### உலக சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றது நெதர்லாந்து



நெதர்லாந்தின் குரோனிங்கன் நகரில் நடைபெற்ற உலக டைவிங் செஸ் சம்பியன்ஷிப் போட்டியில், அந்த நாட்டைச் சேர்ந்த வீரர்களே முதலிடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளனர்.

இந்த போட்டி வழக்கமான சதுரங்கப் போட்டிகளைப் போலன்றி, இது நீச்சல் தடாகத்தின் அடியில் மூச்சைப் பிடித்துக்கொண்டு விளையாடப்படும் ஒரு வினோதமான மற்றும் சவாலான விளையாட்டாகும்.

இம்முறை நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் போட்டியில் 40 போட்டியாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்தப் போட்டியில் சதுரங்கப் பலகைகள் காந்தத் தன்மையுடனும் காய்கள் பாரமானவையாகவும் வடிவமைக்கப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு வீரரும் தண்ணீருக்கு அடியில் மூழ்கி, ஒரே மூச்சில் ஒரு நகர்வை மேற்கொண்டு விட்டு, மீண்டும் சுவாசிப்பதற்காக மேலே வர வேண்டும்.

சில சமயங்களில் எதிராளியை திணறடிப்பதற்காக மிக வேகமாக நகர்வுகள் மேற்கொள்ளப்படும். இது வீரர்களின் நிதானத்தையும், மூச்சைக் கட்டுப்படுத்தும் திறனையும் ஒரே நேரத்தில் சோதிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த போட்டியில் நெதர்லாந்தின் முன்னாள் சம்பியனான சியோன் கோலன் ஆண்கள் பிரிவில் உலக சம்பியன் பட்டத்தை வென்றார். நெதர்லாந்தைச் சேர்ந்த 17 வயதான ஜோசபின் டேமன் பெண்கள் பிரிவில் உலக சம்பியனாக் முடிசூட்டப்பட்டார்.

இந்த "டைவிங் செஸ்" விளையாட்டானது அமெரிக்க சதுரங்க வீரரான ஏடன் இல்ஃபெல்ட் என்பவரால் உருவாக்கப்பட்டது. அறிவுத் திறனுடன் உடல் வலிமையையும் இணைக்கும் ஒரு விளையாட்டாக இது தற்போது உலகளவில் பிரபலம் அடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நியுசிலாந்து தொடரில் முகமது ஷமி கிரிக்கெட் வாரியம் பரிசீலனை

நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் பும்ராவுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டு முகமது ஷமி இடம் பெற வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

2027 உலககோப்பையை கருத்தில் கொண்டும் இந்த முடிவு எடுக்கப்படலாம்.

இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவர் முகமது ஷமி. 35 வயதான அவர் கடைசியாக கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஐ.சி.சி. சம்பியன்ஸ் டிராபி இறுதிப் போட்டியில் நியூசிலாந்துக்கு எதிராக விளையாடி இருந்தார்.

அதன் பிறகு காயம் மற்றும் பணிச்சுமை காரணமாக முகமது ஷமி இந்திய அணியில் இருந்து விலகி இருந்தார்.

இதற்கிடையே 2027 ஆம் ஆண்டு உலக கோப்பையில் முகமது ஷமியை சேர்ப்பது தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் ( பி.சி.சி.ஐ.) பரிசீலித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. முதல் கட்டமாக அவர் நியூசிலாந்துக்கு எதிராக அடுத்த மாதம் நடைபெற உள்ள ஒருநாள் தொடரில் இடம்பெற இருப்பதாக கூறப்படுகிறது. 10 மாதங்களுக்கு பிறகு அவர் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் கால்பதிக்க உள்ளார்.

இது தொடர்பாக பி.சி.சி.ஐ. வட்டாரங்கள் கூறியதாவது, முகமது ஷமி தேர்வு குழுவின் விவாதத்தில் தொடர்ந்து இருந்து வருகிறார். அவர் அணியை விட்டு முழுமையாக விலக்கப்படவில்லை. அவருடைய உடற்தகுதி மட்டுமே முக்கிய கவலையாக இருந்தது. ஆனால் தற்போது அவர் நல்ல உடற்தகுதியுடன் உள்ளார். ஷமி போன்ற அனுபவம் வாய்ந்த பந்து வீச்சாளர் அணிக்கு தேவை.

2027 உலககோப்பையை கருத்தில் கொண்டும் இந்த முடிவு எடுக்கப்படலாம். நியூசிலாந்து தொடரில் அவர் தேர்வு செய்யப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (நி)

## ரி-20 உலக கோப்பை தொடருக்கான அவுஸ்திரேலியா அணி அறிவிப்பு

20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் மார்ச் 8ஆம் திகதி வரை இந்தியா, இலங்கையில் நடைபெறுகிறது. இதில் 20 நாடுகள் பங்கேற்கின்றன.

இந்தப் போட்டிக்கான இந்தியா, இங்கிலாந்து, ஆப்கானிஸ்தான், ஓமன் ஆகிய அணிகள் அறிவிக்கப்பட்டன.

இந்த நிலையில் 20 ஓவர் உலக கோப்பை போட்டிக்கான 15 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய அணியில் ஆல்ரவுண்டர் கூப்பர் கனோலி இடம் பெற்றுள்ளார். இடது கை பேட்ஸ்மேனான அவர் இடதுகை சுழற்பந்து வீரர் ஆவார். பிக் பாஷ் லீக் போட்டியில் அவரது ஸ்டிரைக் ரேட் 166.66 ஆக இருந்தது.

மிச்சேல் ஓவன், பென் டுவார்சியஸ் ஆகியோருக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

காயத்தில் இருந்து குணமடைந்த கம்மின்ஸ், ஹேசல் வுட், டிம் டேவிட் ஆகியோரும் அணியில் இடம்பெற்று உள்ளனர்.

மிச்சேல் மார்ஷ் (கப்டன்), சேவியர் பார்ட்லெட், கூப்பர் கனோலி, கம்மின்ஸ், டிம் டேவிட், கேமரூன் கிரீன், நாதன் எல்லிஸ், ஹேசல்வுட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்லிஸ், மாட் குனெமன், மேக்ஸ் வெல், மேத்யூ ஷார்ட், ஸ்டோனிஸ், ஆடம் ஜம்பா. (நி)

## அபிஷேக் சர்மா புதிய சாதனை ரி-20 அரங்கில் ரன் மழை



"ரி-20" அரங்கில் ஒரு ஆண்டில் அதிக "ஸ்டிரைக் ரேட்" கொண்ட வீரர் என, இந்தியாவின் அபிஷேக் சர்மா புதிய சாதனை படைத்தார்.

இந்திய "ரி-20" அணியின் துவக்க வீரர் அபிஷேக் சர்மா 25. ரோகித் சர்மா ஓய்வுக்குப் பின், "ரி-20" அரங்கில் சிறப்பான ரன் குவிப்பை வெளிப்படுத்தி வருகிறார். சர்வதேச பேட்டர் தர வரிசையில் 908 புள்ளியுடன் உலகின் "நம்பர்-1" வீரராக திகழ்கிறார்.

இந்தியா, பஞ்சாப், ஐதராபாத் (பிரிமியர் தொடர்) அணிகளுக்காக ரன் மழை பொழிகிறார். 2025 ஆம் ஆண்டில் இவர் மொத்தம் 1602 ரன் எடுத்துள்ளார். தவிர, கடந்த ஆண்டு விளையாடிய அனைத்து போட்டியிலும் இவரது பட்டிங் "ஸ்டிரைக் ரேட்" 202.01 ஆக உள்ளது.

இதையடுத்து, உள்ளூர், சர்வதேச "ரி-20" இல் ஒரு ஆண்டில் குறைந்தது 1000 ரன் எடுத்த வீரர்களில், 200 இற்கும் மேல் பட்டிங் "ஸ்டிரைக் ரேட்" வைத்துள்ள முதல் வீரர் என சாதனை படைத்தார் அபிஷேக். இதற்கு முன் 198.07 ஆக இருந்தது தான் அதிகம். இதை, 2024 இல் அபிஷேக் சர்மா எட்டி இருந்தார்.

சர்வதேச "ரி-20" இல் இந்திய அணிக்காக அபிஷேக் சர்மா, 859 ரன் எடுத்துள்ளார். இதன் "ஸ்டிரைக் ரேட்" 193.46 ஆக உள்ளது. இதையடுத்து 2025 இல் சர்வதேச "ரி-20" இல் குறைந்தது 500 ரன் எடுத்த வீரர்களில், அதிக "ஸ்டிரைக் ரேட்" கொண்ட வீரர் வரிசையில் அபிஷேக் முதலிடம் பிடித்தார். கப்டன் சூர்யகுமாரை (1164 ரன், 187.43) பின் தள்ளினார்.

"ரி-20" இல் 1000 ரன்னுக்கும் குறைவாக எடுத்து அதிக "ஸ்டிரைக் ரேட்" பெற்ற வீரர்களில் இந்தியாவின் இளம் வீரர் வைபவ் சூர்யவன்ஷி 14, முதலிடத்தில் உள்ளார். இவர், 2025 இல் மொத்தம் 688 ரன் ("ரி-20") எடுத்தார். இவரது "ஸ்டிரைக் ரேட்" 204.15 ஆக உள்ளது.

சர்வதேச கிரிக்கெட்டில் 2025 ஆம் ஆண்டின் இறுதி தரவரிசை பட்டியலில் இந்திய வீரர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். ஒருநாள் பேட்டர் வரிசையில் ரோகித் சர்மா (781 புள்ளி), கோலி (773) முதல் இரு இடம் பிடித்துள்ளனர். "ரி-20" பேட்டர்களில் அபிஷேக் சர்மா (908) முதல்வனாக உள்ளார். திலக் வர்மா (805) 3 ஆவது இடத்தில் உள்ளார். டெஸ்ட் அரங்கில் உலகின் "நம்பர்-1" பவுலராக பும்ரா (879) திகழ்கிறார். "ரி-20" பவுலர் வரிசையில் வருண் சக்ரவர்த்தி (804) முதலிடத்தில் உள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பிள்ளைகள் பற்றிய உண்மைகளை வெளிக்கொணர உதவுங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம்

**(வவுனியா) காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகள் பற்றிய உண்மைகளை வெளிக்கொணர ஆதரவளிக்குமாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**





புதுவருட தினமான நேற்று வவுனியாவில் குறித்த சங்கத்தால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில், நாங்கள் அரசியல்வாதிகளாக அல்ல. மாறாக உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலைக் கோரும் தாய்மார்களாகவே இந்த தார்மீக அடிப்படையில் பேசுகிறோம். தமிழ் வரலாறு காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசியலமைப்புகளுடனோ அல்லது திணிக்கப்பட்ட அரசியல் கட்டமைப்புக்களுடனோ தொடங்கவில்லை.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளின் தாய்மார்களாகிய நாங்கள், வவுனியாவில் 3 ஆயிரத்து 237 ஆவது நாட்களுக்கும் மேலாகத் தொடர்ச்சியாக சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்கிறோம்.

இந்தத் தியாகம் மற்றும் மனவுறுதி நிறைந்த இடத்திலிருந்து, காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளைப் பற்றிய உண்மையை வெளிக்கொணர உதவுமாறும், தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடரும் இனப்படுகொலையை நிறுத்தி இறைமையை மீட்டெடுக்க ஆதரவளிக்குமாறு அமெரிக்காவையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் தொடர்ந்து கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தின் போது அவர்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்தி இருந்ததுடன், காணாமல் ஆக்கபட்ட தமது உறவுகளின் புகைப்படங்களையும் தாங்கி இருந்தனர். (8-209)





யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. அதன் போது, தேசியக் கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதமும் இசைக்கப்பட்டு, உத்தியோகஸ்தர்கள் சத்தியப்பிரமாணம் எடுத்தனர். (படம்- சிவசாந்தன்)

## புன்னாலைக்கட்டுவன் பகுதியில்

# அயல்வீட்டுக்காரரை கத்தியால் குத்தியவர் கைது

(யாழ்ப்பாணம்)

அயல் வீட்டுக்காரரை கத்தியால் குத்திய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புன்னாலைக் கட்டுவன் பகுதியில் அயல் வீடான இரு வீட்டார் இடையில் ஏற்பட்ட தர்க்கத்தில் பெண்ணொருவர் அயல் வீட்டார் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தியுள்ளார்.

குறித்த தாக்குதலில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில், விசாரணைகளை முன்னெடுத்த சுன்னாகம் பொலிஸார் தாக்குதலை மேற்கொண்ட பெண்ணை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(8-33-104)



இலங்கை வங்கி கொழும்பு தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற சம்பிரதாயபூர்வ கொண்டாட்டங்களுடன் புத்தாண்டைத் தொடங்கியது. இதில் வாடிக்கையாளர்கள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், நிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்தினர், ஊழியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தலைவர் காவிந்த டி சொய்சா, குறித்தளிக்கப்பட்ட பிரதம செயற்பாட்டு அதிகாரி எம்.ஆர்.என்.ஜீவந்த, பிரதிப் பொது முகாமையாளர் ஜி.ஏ. ஜயஷாந்த ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிறுவனம், அதன் பங்குதாரர்கள் மற்றும் சமூகத்திற்கான ஆசீர்வாதங்களை வேண்டி சர்வ மத வழிபாடுகள் இடம்பெற்றன.

## தொண்டைமானாறு நீரேரியில்

# முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

## பொதுமக்கள் அவதானம்

(கரணவாய்)

தொண்டைமானாறு நீரேரியை ஒட்டிய பகுதியில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

எனவே பலாலி, மயிலிட்டி-தொண்டைமானாறு ஊடாகப் பயணிப்போர் மிக அவதானமாக செல்லுமாறு வல்வையின் நீதிக்கான குரல் தெரிவித்துள்ளது. (8-60)

# கலை, விளையாட்டு மன்றங்களுக்கு உபகரணங்கள் வழங்கல்



(கிளிநொச்சி)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பதிவு செய்யப்பட்ட 8 கலை இலக்கிய மன்றங்களுக்கான ஆற்று கைப்பொருட்கள் பதிவு செய்யப்பட்ட 36 விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு, வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் மு.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற துடன் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் கலந்து கொண்டார்.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.மோகனபவன், பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி என்.தர்சினி, மாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் பா.முகுந்தன் உள்ளிட்ட பல அதிகாரிகள் மற்றும் அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர். (8)

# கிளிநொச்சி நகர்ப் பகுதியில் உணவுப் பாதுகாப்பு பரிசோதனை

(சாவகச்சேரி)

கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட கிளிநொச்சி நகர்ப்பகுதியில் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு உணவு கையாளும் நிலையங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் விசேட உணவுப் பாதுகாப்புப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது உணவு விடுதிகள், உணவகங்கள், பல்பொருள் அங்காடிகள், குளிர்களி உற்பத்திச்சாலைகள், தேனீரகங்கள், தெருவோர விற்பனை நிலையங்கள், வெதுப்பகங்கள் மற்றும் சந்தை என்பவற்றில் காலாவதியான பொருட்களை விற்பனைக்காக முன்வைத்தமை, சட்டமீறலுக்குட்பட்ட வகையில் உட்பட பல நடவடிக்கைகளுக்காக வழக்குத்தாக்கல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதோடு சுகாதாரத்துக்கு கேடான பெருமளவான உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-30)

**இந்திய சாஸ்திரியார் வருகை**

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-076 682 7368
யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி
ஈச்சமோட்டை றோட், இல.89, யாழ்ப்பாணம்
(முன்பதிவு செய்து வரவும்)


(C-4726)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2026 ஆம் ஆண்டின் அரச சேவைகள் சத்தியப்பிரமாணத்துடன் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 2026 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.
ஆளுநர் செயலகப் பணியாளர்கள் முன்னிலையில், தேசியக் கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன், இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.
தொடர்ந்து அரச உத்தியோகத்தர்களின் 2026ஆம் ஆண்டுக்கான சத்தியப்பிரமாணம் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது. (8)



(யாழ்ப்பாணம்)
2026 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. தொடர்ந்து சத்தியப்பிரமாணம் இடம்பெற்றது. (8-33)



(கிளிநொச்சி)
2026 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. தொடர்ந்து வருடத்திற்கான முதல் நாள் கடமைகளை ஆரம்பிக்கும் அரச சேவை சத்தியப்பிரமாண நிகழ்வு கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெற்றது. (8)



(வவுனியா)
புது வருடத்தின் முதல் நாளான நேற்று அரச உத்தியோகத்தர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத் சந்திர தலைமையில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கடமைகளை ஆரம்பித்தனர். (8-250)

# திருவாதிரை உற்சவம்

(யாழ்ப்பாணம்)
யாழ். வண் வட கிழக்கு கலட்டி வீரகத்தி பிள்ளையார் தேவஸ்தானத்தில் திருவாதிரை உற்சவம் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.
காலை 6.45 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி விநாயகர், நடராஜப்பெருமானுக்கு விஷேட பூஜையுடன் திருவெம்பாவை அருளப்பட்டு , வசந்தமண்டப பூஜையுடன் விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார் என ஆதீன கர்த்தாவும், பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (8)

# மீன்வியாபாரி என்ற போர்வையில் மாட்டிறைச்சி கடத்தியவர் கைது

(யாழ்ப்பாணம்)
மீன் கொண்டு செல்லும் பெட்டியில் மறைத்து, மோட்டார் சைக்கிளில் எடுத்துச் செல்லப்பட்ட சட்டவிரோத மாட்டு இறைச்சியுடன் ஒருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
குறித்த சம்பவம் வேலணை - அராலிச் சந்தியில் இடம்பெற்றதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,
புங்குடுதீவு பகுதியில் இருந்து சட்ட விரோதமான முறையில் இறைச்சியாக் கப்பட்ட 35 கிலோ மாட்டு இறைச்சியுடன் மோட்டார் சைக்கிளில் மீன் வியாபாரி என்ற போர்வையில் வந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
ஊர்காவற்றுறை போக்குவரத்து பொறுப்பதிகாரி சமன் குமார தலைமையிலான பொலிஸ் அணியினர் முன்னெடுத்திருந்த விசேட சோதனை நடவடிக்கையின் போது மீன் பெட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டு எடுத்துச் செல் லப்பட்ட தலா ஒரு கிலோ நிறைகொண்ட 35 இறைச்சிப் பொதிகள் கைப்பற்றப்பட்டது.
அத்துடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டதுடன் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டது.
விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். (8-33-104)

## சந்தைகளில் நேற்றைய விலை | பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 900 | 750 | 800 | 650 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 240 | -- |
| பச்சைமிளகாய் | 1400 | 1500 | 1200 | 1400 |
| தக்காளி | 500 | 700 | 600 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 150 | 100 |
| கோவா | 300 | 350 | 400 | 300 |
| கரட் | 400 | 400 | 450 | 300 |
| பூசணி | 140 | 120 | 150 | 80 |
| புடோல் | 400 | 400 | 400 | 300 |
| வாழைக்காய் | 120 | 150 | 200 | 180 |
| சின்ன வெங்காயம் | 250-300 | 300 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 240 | 200 | 240 | 200 |
| பாகற்காய் | 1000 | 1000 | 1500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 350 | 600 | 300 |
| கருணைக் கிழங்கு | 260 | 250 | 400 | 300 |
| பயற்றங்காய் | 600 | 600 | 600 | 400 |
| லீக்ஸ் | 450 | 450 | 500 | 400 |
| பீற்றூட் | 600 | 800 | 800 | 650 |
| கறிமிளகாய் | 1100 | 1500 | 1500 | 1500 |
| முருங்கைக்காய் | -- | 2000 | -- | -- |
| போஞ்சி | 650 | 800 | 800 | 600 |
| கத்தரிதம்புள்ள | 700 | 600 | 700 | -- |
| கீரை – 1 பிடி | 80-180 | 200 | 250 | 180 |
| தேசிக்காய் | 600 | 300 | 250 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 120-150 | 120 |
| இராசவள்ளி | 900 | 450 | 500 | 475 |
| வெங்காயப்பூ | 1000 | 1000 | 800 | -- |
| முள்ளங்கி | 250 | 300 | 250 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 150 | 80 | 50 |
| வல்லாரை | 70 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 150 | 100 | 120 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 13, புன்னாலை வீதி, 477 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மரைக்கார் தம்பி பெண் செய்நம்பு நாசிசியார் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை அப்துல் காதர், மொகமட் அப்துல் காதர் உம் பெண் சுல்தான் மொகிதீன் நாச்சியாவும் ( 1 பரப்பு 10.5 குளி), மீரான் மொகிதீன் மரிக்கார் தம்பியும் பெண் செய்நம்பு நாச்சியாவும் (1 பரப்பு 10.5 குளி), 26.02.1947ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கல்தான் மொகிடீன் மொகமட் அபூபக்கர் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5371ஆம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் பிரிவிடல் செய்துள்ளனர்.

குறித்த ஆதனத்தை ஹமிதா ஜமீல், மொகமட் ஜமீல் மொகமட் ஜபிர், எம்.ஜே.எம் ஜசீம், எம்.ஜே. சிம்லா பேகம், எம். ஜே. சம்சியா பேகம், எம் தாகிர் றொஜனி, சுல்தான் அப்துல்காதர் பாத்திமா பர்ஜனா, எஸ். ஏ. சி.சிராஜுன் முனீர் 03.11.2022ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். எம். எம் ரமீஸ் முகதாவில் 4879 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் குசைன் சலீம் மொகமட் அஸ்மி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை குசைன் சலீம் மொகமட் அஸ்மி மற்றும் சுல்தான் அப்துல்காதர் சஹ்னஸ் ஆயிஷா 10.02.2025ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். எம்.எம். ரமீஸ் முகதாவில் 5349ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் தர்சிகா பஸ்லீம் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை, யாழ்ப்பாண பிரதேசசெயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/82 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் "பரந்தன் புளியடி" நிலப்பரப்பு 01 குளி 10.80 (நிலப்பரப்பு ஒன்று குளி பத்து தசம் எட்டு சைபர்) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ரி. தங்கராஜா அவர்களால் 08.08.2020ஆம் திகதி அளந்து வரையப்பட்ட 11469ஆம் இலக்க படத்தின்படி துண்டு 01 எனச்சுட்டிய ஆதனம்.

இதற்கெல்லைகள்.-
வடக்கு: அப்துல் காதர் மொகமட்ஜலீல் இன் ஆதனம்.
கிழக்கு: மானிப்பாய் வீதி
மேற்கு: செல்லம்மா ஆறுமுகத்தின் ஆதனம்.
தெற்கு: அப்துல் காதர் பாரூக்கின் ஆதனம்.
இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை தர்சிகா பஸ்லிம் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது தர்சிகா பஸ்லீம் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**முதல்வர்,**
**யாழ் மாநகரசபை.**

(C-4724)

# கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

## படவரைஞர்களை பதிவு செய்தல்/புதுப்பித்தல்-2026

2026ஆம் ஆண்டிற்கான கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைய விரும்பும் படவரைஞர்கள் (புதிதாக பதிவு செய்ய விரும்புபவர்கள் மற்றும் பதிவினை புதுப்பித்துக்கொள்ள விரும்புபவர்கள்) பதிவினை மேற்கொள்வதற்கான இறுதித்திகதி 16.01.2026 ஆகும். மேலும் கீழ்வரும் விடயங்களைக் கருத்தில் கொண்டு உரிய ஆவணங்களுடன் 16.01.2026 ஆம் திகதி மதியம் 1.00 மணிக்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி உப அலுவலகம் கிளிநொச்சி, உப அலுவலகம் முரசுமோட்டை ஆகிய அலுவலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தகமானிப் பத்திரிகை (அதிவிசேடமானது) 2235/54 ஆம் இலக்க 2021 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 08ஆம் திகதிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சட்ட ஒழுங்கு விதிகள் அட்டவணை 03 இற்கு அமைவாக (தகமை பெற்ற நபர்கள்) விண்ணப்பிக்க முடியும்.


**கல்வித்தகைமை :-** NVQ-Level 5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்கள் அல்லது NVQ-Level 4 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினைப் பூர்த்தி செய்துள்ளதுடன், தற்போது NVQ-Level 5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் கடிதத்தினை உரியகல்வி நிறுவனத்திடம் இருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும் எனும் நிபந்தனையுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

- ❖ விண்ணப்பப்படிவம் வழங்கும் திகதி :- 05.01.2026 தொடக்கம் 16.01.2026 (அலுவலக நாட்களில் மு.ப 09.00 - பி.ப 03.00 மணிவரை)
- ❖ விண்ணப்பபடிவம் ஏற்கும் இறுதித்திகதி :- 16.01.2026 மதியம் 1.00 மணிவரை
- ❖ கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சியில் பதிவு செய்யத்தவறின் அல்லது புதுப்பிக்கத்தவறும் எந்தவொரு படவரைஞரும் எமது பிரதேச சபையில் 2026 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக தொழிற்பட முடியாது.
- ❖ படவரைஞர் பதிவு செய்தல் கட்டணம் :- ரூபா 5,000.00
- ❖ விண்ணப்ப படிவக்கட்டணம் :- ரூபா 1000.00
- ❖ மேலதிக விபரங்கள், கட்டண விபரங்கள், நிபந்தனைகளை கரைச்சி பிரதேச சபையின் உப அலுவலகங்களில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.அருணாசலம் வேழமாலிகிதன்,**
**தவிசாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-4725) 2026.01.02

# மரண அறிவித்தல்



அன்னை மடியில்
18.02.1952

இறைவன் அடியில்
28.12.2025

## அமரர். கந்தையா துரைசிங்கம் (துரை)

### ஓய்வுபெற்ற பிரதம தபால் அதிபர்
### (யாழ்ப்பாணம், வவுனியா, கல்கிசை)

யாழ்.சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், ஆறுமுகம் வட்டக்கச்சி, யாழ்ப்பாணம், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் தற்போது 164, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திரு.கந்தையா துரைசிங்கம் (துரை) அவர்கள் கடந்த 28.12.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-கதிராசிப்பிள்ளை (இரத்தினக்கா) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-விசாலாட்சி, மற்றும் அமிர்தாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகனும், அற்புதராணி (ராணி) அவர்களின் ஆருயிர்க் கணவரும், பிரபாகரன் (பிரபா)- பிரான்ஸ், சுபாஜினி(சுபா)- பிரான்ஸ், சுஜாந்தினி (சுஜா)-கனடா, ஜயந்தன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அம்பிகைவதனி (அம்பிகா)-பிரான்ஸ், பேரின்பநாதன் (கண்ணன்)-பிரான்ஸ், சிந்துஜன்(சிந்து)- கனடா, சுகாநந்தி (சுகா)-கனடா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஜிஸ், அத்விகா, ஆத்மிகா, அர்மிகன், அர்னிகா, அபிநிசா, பாவகி, வெற்றி, ஏரகன் ஆகியோரின் ஆசைப்பேரனும், காலஞ்சென்றவர்களான குணபாலசிங்கம் (குணம்), இராஜேஸ்வரி(ராணி), சிவமலர் (மலர்), மற்றும் சிவயோகம்(மோகனா), காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம்(ராசா), மல்லிகாதேவி(மல்லிகா) மற்றும் சுகந்தாதேவி(சுகந்தா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 04.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 10.30 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல 164, இராமலிங்கம் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி**

(6451)

*தகவல் :*
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தோனேசியாவில் சீறும் எரிமலை
## ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றம்



(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் உள்ள பர்னி தெலோங் எரிமலை சீற்றத்துடன் காணப்படுவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதியில் இருந்து பொதுமக்களை அப்புறப்படுத்தி வருகின்றனர்.

தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேஷியாவில், 120இற்கும் மேற்பட்ட எரிமலைகள் உயிர்ப்புடன் உள்ளன. ஆச்சே மாகாணத்தில் பெனர் மெரியா மாவட்டத்தில் 8,600 அடி உயரமுள்ள பர்னி தெலோங் எரிமலையில், ஏழு முறை பலத்த அதிர்வுகள் ஏற்பட்டன.

இந்த அதிர்வு, 5 கி.மீ. தூரம் வரை உணரப்பட்டது.

கடந்த ஜுலை முதல் இதன் செயற்பாடு அதிகரித்து வந்த நிலையில், சில மாதங்களாக மேலும் தீவிரமடைந்துள்ளது.


இதனால் எந்த நேரத்திலும் எரிமலை வெடித்து சிதறலாம் என அந்நாட்டு புவியியல் ஆய்வு நிறுவனம் எச்சரித்துள்ளது.

இதைத்தொடர்ந்து பர்னி தெலோங் எரிமலையை சுற்றி 5 கி.மீ., சுற்றளவுக்கு பொதுமக்கள் செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மேலும் 3 கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். (நி)



## இஸ்ரேலிய உயரிய விருதை ட்ரம்பிற்கு வழங்க தீர்மானம்



(ஜெருசலேம்)

அமைதிக்காக நோபல் பரிசு கிடைக்காத விரக்தியில் இருந்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு இஸ்ரேல் ஆறுதல் பரிசு அறிவித்துள்ளது.

உலக நாடுகள் இடையே அமைதியை ஏற்படுத்தி வரும் தனக்கு, அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வலியுறுத்தி வந்தார்.

பாகிஸ்தான் உட்பட பல நாடுகள் இவரின் பெயரை பரிந்துரை செய்த நிலையிலும், அவருக்கு அந்த விருது கிடைக்கவில்லை.

இந்நிலையில், மேற்காசிய நாடான இஸ்ரேலின் உயரிய குடிமகன் விருதான, "இஸ்ரேல் பரிசு" அமெரிக்க ஜனா திபதி ட்ரம்புக்கு வழங்கப் படும் என, அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

"அமைதி" பிரிவில் முதன் முறையாக, இஸ்ரேல் அல்லாத ஒருவருக்கு இந்த விருது வழங்கப்பட உள்ளது.

இதுகுறித்து நெதன்யாகு கூறுகையில், "அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பல மரபுகளை உடைத்து உலகை ஆச்சரியப்படுத்தியுள்ளார்".

"அதனால் நாங்களும் ஒரு மரபை உடைக்க முடிவு செய்தோம்.

80 ஆண்டுகளில் முதன் முறையாக இஸ்ரேலின் உயரிய விருதை ட்ரம்புக்கு வழங்க உள்ளோம்.

இஸ்ரேல், யூத மக்களுக்கு அவர் ஆற்றிய பெரும் பங்களிப்புக்காக வழங்கப்படுகிறது," என அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு இஸ்ரேல் சுதந்திர தின விழாவில் ஜனாதிபதி ட்ரம்ப் இந்த விருதைப் பெறுவார் என தெரிவிக்கப்படுகிறது. (நி)



## உக்ரை
## ரஷ்யா வெ

### புத்தாண்டு
### நம்பிக்கை வெ

(மொஸ்கோ) உக்ரைன் போரில் ரஷ்யா
என ரஷ்ய ஜனாதிபதி புடின்
தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி புடின் கூறியதாவது: உங்கள் பூர்வீக நிலத்திற்காகவும், உண்மைக்காகவும், நீதிக்காகவும் போராடும் பொறுப்பை நீங்கள் (பாதுகாப்பு படையினர்) ஏற்றுக்கொண்டுள்ளீர்கள்.

இந்தப் புத்தாண்டு இரவில் ரஷ்யா முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் உங்களுடன் இருப்பதாக நான் உங்களுக்கு உறுதியளிக்

## இந்தியா - பாகிஸ்தா
## மீண்டும் மோதல் ஏ

### அமெரிக்கா எதிர்



காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலையடுத்து பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்களை இந்தியா தாக்கி அழித்தது.

இதையடுத்து இந்தியா -பாகிஸ்தான் இராணுவங்கள் இடையே மோதல் ஏற்பட்டது.

இந்த நிலையில் 2026ஆம் ஆண்டில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மீண்டும் ஆயுத மோதல் ஏற்படும் என்று அமெரிக்க சிந்தனைக்குழு ஒன்று கணித்துள்ளது.

சபையில் ஆன் பாரின் ரிலேஷன்ஸ் அமைப்பு அமெரிக்க வெளியுறவுக் கொள்கை நிபுணர்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது.


அதில் அதிகரித்த பயங்கரவாதச் செயற்பாடு காரணமாக 2026ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ன் போரில் வெற்றி பெறும்

## உரையில் ளியிட்ட புடின்

வெற்றி பெறும் திட்டவட்டமாக



கிறேன்.

உக்ரைன் போரில் ரஷ்யா வெற்றி பெறும். புத்தாண்டில் நமது அனைத்து வீரர்கள் மற்றும் தளபதிகளுக்கும் நான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் உங்களை நம்புகிறோம். ரஷ்யாவின் மீதான உண்மையான, தன்னலமற்ற மற்றும் அர்ப்பணிப்புள்ள அன்பினால் ரஷ்யர்கள் ஒன்றுபட்டுள்ளனர் என ஜனாதிபதி புடின் தெரிவித்தார்.

போரிஸ் யெல்ட்சின் பதவி விலகிய பின்னர், 1999இல் புத்தாண்டுக்கு முன்னதாக புடின் ரஷ்ய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று 26 ஆண்டுகள் நிறைவுபெற்றது. (நி)

# மலர்ந்தது 2026

## முதலில் வரவேற்றது கிரிபாட்டி



(கிரிபாட்டி)

உலகம் முழுவதும் 2026ஆம் ஆண்டை வரவேற்பதற்கான கொண்டாட்டங்கள் நேற்று களை கட்டிய நிலையில், பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள கிரிட்டிமாட்டி தீவு உலகிலேயே முதன் முதலாகப் புத்தாண்டை வரவேற்றுள்ளது.

கிரிபாட்டி நாடு பல நேர வலயங்களைக் கொண்டிருந்தாலும், அதன் கிரிட்டிமாடி தீவு சர்வதேச திகதிக்கோட்டிற்கு மிக அருகில் உள்ளதால், உலகிலேயே முதன் முதலாகப் புத்தாண்டை வரவேற்கும் இடமாகத் திகழ்கிறது.

இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் மாலை 3:30 அளவில் கிரிபாட்டி தீவில் நள்ளிரவு 12 மணிக்கு 2026 புத்தாண்டு பிறந்தது.

“கிறிஸ்மஸ் தீவு” என்றும் அழைக்கப்படும் இந்தத் தீவில் வசிக்கும் மக்கள், வாண வேடிக்கைகள் மற்றும் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் 2026ஆம் ஆண்டை உற்சாகமாக வரவேற்றனர். (நி)




# ன் இடையே ற்படலாம்

## வுகூறல்

ஆண்டில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஆயுத மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

மேலும் மீண்டும் தலைதூக்கும் எல்லை தாண்டிய பயங்கரவாதத் தாக்குதல்களால் 2026 இல் ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஆயுத மோதல் ஏற்படுவதற்கு மிதமான வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்து உள்ளது. (நி)



# கடித விநியோக சேவையை நிறுத்தியது டென்மார்க்




(ஹோபன்ஹேகன்)

உலகில் முதல் நாடாக டென்மார்க், கடித விநியோக சேவையை முற்றிலுமாக நிறுத்தியுள்ளது.

ஐரோப்பிய நாடான டென்மார்க்கில், 1624ஆம் ஆண்டு முதல் அஞ்சல் சேவை வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் டிஜிற்றல் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் கடிதம் அனுப்புவோரின் எண்ணிக்கை வெகுவாக குறைந்ததால் இதனை நிறுத்த அந்நாட்டு அரசு முடிவு செய்தது.

டென்மார்க்கில் 2000ஆம் ஆண்டு முதல் கடிதம் அனுப்புவோரின் எண்ணிக்கை, 90 சதவீதத்துக்கும் மேல் குறைந்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

இதனால் 401 ஆண்டுகள் பழமையான இந்த கடித சேவையை அந்நாட்டின் போஸ்ட் நோர்ட் அஞ்சல் நிறுவனம் நிறுத்தியுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.1.1 கோடி பெறுமதியான சிகரெட்டுகள் பறிமுதல்

## கடத்தி வந்த இருவர் சிக்கினர்

(கொழும்பு)

டுபாயிலிருந்து இலங்கைக்கு சட்ட விரோதமான முறையில் சிகரெட்டு களைக் கடத்தி வர முயன்ற இரண்டு பயணிகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து சுமார் 1 கோடியே 13 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

அண்மையில் டுபாயிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான UL-232 விமானம் மூலம் கல்முனையைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவர் நாட்டை வந்தடைந்தார்.

அவர் எவ்வித பொருட்களும் இல்லை என அறிவிக்கும் பசுமை நடை பாதை ஊடாக வெளியேற முயன்ற போது, சுங்கப் பிரிவினரால் சோதனை யிடப்பட்டார்.

அதன்போது அவரது பயணப் பொதிகளில் இருந்து 5,310,000 ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட் கார்ட்டூன்கள் கண்டெடுக்கப்பட்டன.

இதனையடுத்து, குறித்த பொருட்கள் அரசுடைமையாக்கப்பட்டதுடன், அவருக்கு 177,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை அன்றைய தினமே, டுபாயிலிருந்து வருகை தந்த கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரும் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 6,030,000 ரூபாய் பெறுமதியான பல வெளிநாட்டு சிகரெட் பெட்டிகள் கைப்பற்றப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் குறித்த பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், அவருக்கு 201,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த இரண்டு சோதனைகளிலும் மீட்கப்பட்ட மொத்த சிகரெட்டுகளின் பெறுமதி 11,340,000 ரூபாய் என விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
8இல்செவ்
கி-பா: 33 1/4
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: BSc, MSC, Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16386

பிறப்பு:1990 - இந்து
நட்சத்திரம்:சதயம்
உயரம்:5'10"
தகைமை/தொழில்-BA,MA,PGDE, MEd, MPhil,Principal
எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/16387

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
8இல்செவ்
கி-பா: 27 3/4
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:A/L,Data Managment
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16389

பிறப்பு: 1983- இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
12இல் செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: Swiss
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/16391

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:ரேவதி
கி-பா-15 1/2
உயரம்:5'10"
தகைமை/தொழில்: HNDE, TO
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16394

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1 996 - இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா-02
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: NDT, Teacher
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்
தொ.இ: G/15128

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்-பூரம்
1இல்செவ்
கி-பா: 26 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA, DO
எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்
தொ.இ: G/15515

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 66
7இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bsc, Engineer
எதிர்பார்ப்பு: பொறியியலாளர், வைத்தியர், பட்டதாரி
தொ.இ: G/14626

பிறப்பு: 1989-இந்து
நட்சத்திரம்-அச்சுவினி
கி.பா -32 1/2
உயரம்-5"
தகைமை/தொழில்: BA, Home Maker
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், விவாக ரத்தானவர் (வெளிநாடு)
தொ.இ: G/15574

பிறப்பு-1987-இந்து
நட்சத்திரம்: அனுசம்
1இல்செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Fine Arts, DO
எதிர்பார்ப்பு: வெளிநாடு, விவாகரத்தானவர்
தொ.இ: G/15521

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 510



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பாடகர் பலவகை

ஒருவர் ரொம்ப அவசரமாக எங்கேயோ போய்க்கொண்டிருந்தார். “எங்கே சார் இவ்வளவு அவசரம்?” என்றேன்.

“சபாவுக்குப் போகிறேன் சார். சங்கீதக் கச்சேரி கேட்பதற்கு. சீக்கிரம் போனால் தான் முதல் வரிசையிலே இடம் கிடைக்கும்! என்றார்.

“சங்கீதத்தை ரொம்ப நல்லா ரசிப்பீர்கள் போல இருக்கு” என்றேன்.

ரசிக்கிறவன்! “அப்படி இல்லை சார்! நான் சங்கீதத்தை ரசிக்கிறவன் இல்லை. சங்கீத வித்துவான்களை என்றார்.

“என்ன சார் சொல்கிறீர்கள்?” என்றேன்.

“சங்கீதம் பாடுகிறவர்கள் செய்கின்ற சேட்டைகள் எல்லாம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதனாலே தான் முதல் வரிசையிலே உட்கார்ந்து அவர்கள் முகத்தை அருகிலிருந்து பார்த்து ரசிக்கிறேன்!” என்றார்.

இப்படியும் சில ரசிகர்கள் நம்மிலே உண்டு.

அப்படிப்பட்ட ரசிகர்களுக்கான தகவல் இது.

இதைக் தெரிந்து கொண்டால் அவர்கள் இன்னும் கொஞ்சம் விபரமாக அனுபவித்து ரசிக்கலாம்.

பாடும் போது சேட்டை செய்யும் வித்துவான்கள் இருக்கிறார்களே அவர்கள் மொத்தம் 24 வகை உண்டு என்று சொல்கிறது சங்கீத சாஸ்திரம்!

அது எப்படி தெரியுமா? சில பேர் பாடும் போது பல்லைக் கடித்துக்கொண்டு பாடுவார்கள். அவர்களுக்கு “ஸந்தஷ்டர்” என்று பெயர்.

ரஸபேதமா இரைபவர்களுக்கு “உதகுஷ்டர்” என்று பெயர். சில வித்துவான்கள் எப்படித் தெரியுமா? பாடும் போது அடிக்கடி ஸூ, எஸூ என்று சத்தம் வரும் இப்படி ஒலியெழுப்புபவர்களுக்கு “ஸூத்காரி” என்று பெயர்.

சில பேர் பயந்துகொண்டே பாடுவார்கள். இப்படிப் பயத்தோடு பாடுபவர்களுக்கு “பீதர்” என்று பெயர்.

சில பேர் வேக வேகமாகப் பாடுவார்கள். இவர்களுக்கு சங்கீதர் என்று பெயர்.

சில பேர் பாடும் போது கவனித்திருப்பீர்கள். வாயைப் பயங்கரமாக திறந்துகொண்டுப் பாடுவார்கள். இவர்கள் “கராளி”என்ற வகையைச் சேர்ந்தவர்கள்.

ஸ்வரங்களை சுருதிக்கு அதிகமாகவே குறைச்சலாவோ பாடுபவங்களுக்கு “விகலர் என்னு பெயர்.

சில பேர் பாடுகிறேன் என்று சொல்லிக்கொண்டு காகம் மாதிரி கத்துவார்கள். அதாவது காகம் மாதிரி கொடூரமான குரல் உள்ளவர்கள். இவர்களுக்கு “காகீ ” என்று பெயர்.

தாளத்தோட ஒத்துப் போகாமல். தாளம் தப்பிப் பாடுகிறவர் “விதாளர்!”. சில பேர் கழுத்தை மேலே தூக்கிப் பாடுவார்கள். ஒட்டகச்சிவிங்கி மாதிரி” இவர்களுக்கு “கரபர்” என்று பெயர்.

ஆடு மாதிரி கழுத்தை வைத்துக்கொண்டுப் பாடுபவர்கள் “உத்வடர்”

சில பேர் பாடும் போது பார்த்தீர்கள் என்றால் நெற்றி, முகம், கழுத்து இங்கேயெல்லாம் நரம்புகள் புடைக்கும். இப்படிப் பாடுபவர்கள் “ஜோம்பகர்”, பாடும் போது சுரைக்குடுக்கை மாதிரி கழுத்தை வைப்பவர்கள் உண்டு, அவர்களுக்கு “தும்பகீ” என்று பெயர்.

கழுத்தைக் கோணிக்கொண்டுப் பாடுபவர் “வக்ரீ” கைகளை அடிக்கடி நீட்டி நீட்டி பாடுபவர் “ப்ரஸாரி”, கண்களை மூடிக்கொண்டு பாடுபவர் “நிமீலகர்“

ரஸங்களுக்கு ஒவ்வாமல் பாடுபவர் -“விரஸர்” தவிர்க்க வேண்டிய ஸ்வரங்களைப் பிடித்துப் பாடுபவர் “அபஸ்வரர்“.

தழுதழுத்த குரலோடு சொற்களை தெளிவற்ற முறையிலே உச்சரிக்கிறவர் “அவ்யக்தர்” உச்சஸ்தாயி போன்ற மூன்று ஸ்தானங்களையும் எட்ட இயலாதவர் “ஸ்தான ப்ரஷ்டர்”

ஸ்தானங்கள் சுகட்டுப்பாடு இல்லாமல் பாடுபவர் “அவ்யவஸ்திதர்”

ஒன்றோடு மற்ற ராகங்களைக் கலந்து அடிப்பவர் “மிச்ரகர்!”, மேல்ஸ்தாயிகளில் அஜாக்கிரதையாக சஞ்சரிக்கிறவர் “நிர்முக்தர்”. மூக்காலே பாடுகிறவர் “ஸானு நாசிகர்”.

ஆக இப்படி 24 வகைப் பாடகர்கள் உண்டு என்று சங்கீத சாஸ்திரம் சொல்லுது! சங்கீதத்தை ரசிக்கத் தெரியாத நம் ஆட்கள் எல்லாம் இந்த விபரங்களை மனதிலே வைத்துக்கொண்டு போனால் சங்கீத வித்துவான்களையாவது ரசிச்சுட்டு வரலாம்!

ஏதோ நம்மாலே முடிஞ்சது!

நானும் என்னுடைய நண்பர் ஒருவரும் ஒரு இசைக் கச்சேரிக்குப் போனோம். நண்பர் சொன்னார். “இப்போது பாடப் போகிறாரே வித்துவான், இவர் பாடினால் நாள் முழுவதும் கேட்டுக்கொண்டிருக்கலாம்!” என்றார்.

அவ்வளவு நல்லா பாடுவாரா?” என்றேன். அப்படி இல்லை... பாட ஆரம்பித்தால் அவ்வளவு சீக்கிரத்திலே முடிக்க மாட்டார். அதனாலே அப்படிச் சொன்னேன்!” என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அரச ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்' முசலி கிராம உத்தியோகத்தர்கள் போராட்டம்!



(மன்னார்)

மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்கள் தொடர்ந்து தாக்கப்படுகின்றமையை கண்டித்து நேற்று முன்தினம் புதன்கிழமை முசலி பிரதேச செயலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலகர் ஒருவர் தாக்கப்பட்ட நிலையில் சிலாபத்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆனால் தாக்கியவர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இந்த நிலையில் முசலி பிரதேச கிராம அலுவலர்கள் ஒன்றிணைந்து முசலி பிரதேச செயலகத்திற்கு முன் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டதோடு, கிராம அலுவலரை தாக்கியவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (8-285)

# மாலைப்பொழுது

மனதை மயக்கும் பொழுது மாலைப் பொழு தாகும். "மாலை" என்னும் சொல் "மால்" என்ற சொல்லோடு ஐ விகுதி பெற்று மாலை என வழங் கப்படுகிறது. மனித வாழ் வியலில் இப்பொழுது ஓய்வு வேளையாகக் கருதப்படுகிறது. "மால்" என்ற சொல்லுக்கு மயக்கம் என்பது பொருள். இதனால் இப் பொழுதை "மயக்கும் மாலை" எனவும் குறிப்பிடுவர். இயற்கையின் தோற்றப்பாட்டில் மாலையும் அழகான காட்சியே. கதிரவனின் பொற் கதிர்கள் பரவும் மாலை வேளை பொன்மாலைப் பொழுதெனவும் புலவர்களால் பாடப்பட்டுள்ளது.

காலையில் தோன்றும் கதிரவன் மாலையில் மறைகிறான். அந்த மறைவுக் காட்சியே மாலைப் பொழுதாகத் தோன்றுகிறது. இவ் வேளையை ஏனைய நிகழ்வுகளும் நினைவூட்டுகின்றன. இயற்கைத் தோற்றப்பாட்டிற்கு அப்பால் உயிரினங்களும் இப்பொழுதின் வரவை உணர்த்தி நிற்கும். கதிரவன் ஒளி மங்கி இருள் பரவும் போது இரை தேடிச் சென்ற பறவைகளும் விலங்குகளும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்லும். பறவைகள் மாலைக் காலத்தில் கூட்ட மாக வானிலே பறந்து செல்லும் காட்சி கண்ணுக்கு மிக இனிமையாக இருக்கும் மக்களும் தம் செய்தொழில் முடித்து வீடுதிரும்புவர். பகற்பொழுது குறிப்பாகப் பயிர்த்தொழில் செய்வோருக்கு இன்றியமையாதது. பகல் முழுவதும் தொழில் செய்த அயர்ச்சியுடன் தொழிற் கருவிகளையும் சுமந்து அவர்கள் நடந்து செல்வர். அவர்களுடன் நிலத்தைப் பண்படுத்த அவர்களுக்கு உறுதுணையாகப் பணி செய்த காளைகளும் நடந்து வரும்.

மாலையில் தொழில் செய்யும் மீனவர் படகுகளில் ஏறிக் கடல் மேல் செல்வர். எனவே மாலைப் பொழுது அவர்களுக்கு தொழில் தொடங்கும் பொழுதாக உள்ளது. நெய்தல் நிலத்தில் வாழும் மக்களின் வாழ்வியலில் மாலைப் பொழுது செயற்படும் பொழுதாக இருப்பதோடு அச்சம் தரும் பொழுதாகவும் விளங்குகிறது. தொழிலுக்கு கடல் மேல் சென்ற கணவன் வீடு திரும்பும் வரை மனைவி காத்திருப்பாள். இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாகாமல் நலமாகத் திரும்பி அவன் வரவேண்டும் என வழிபாடு செய்து கொண்டிருப்பாள். இதனைப் பண்டைத்தமிழ் இலக்கியங்களில்சிறப்பாகப் பல பாடல்கள் பதிவு செய்து ள்ளன.

சிறுவர்களுக்கு மாலைப் பொழுது ஒரு மகிழ்ச்சிகர மான பொழுதாகும். கல்விப் பயிற்சி முடித்து விளையாட்டில் ஈடுபடும் வேளையாகும்.

பாவலன் பாரதி மாலைப் பொழுதில் சிறுவர் விளை யாட வேண்டும் எனப் பாடியுள்ளான். "மாலை முழுவதும் விளையாட்டு" என்பது அவர் கூற்று. சிறுவருடைய செயற்பாட்டை மகிழ்ச்சியோடு செய்வதற்கு விளையாட்டு ஒரு தூண்டுதலாக இருக்கும்.

மாலைப் பொழுதில் மலரும் பூக்களும் பல உள. "அந்தி மந்தாரை" என்னும் பூ மாலையில் மலரும். பேச்சுவழக்கில் அப்பூவை "நாலுமணிப்பூ" என்றும் இன்று அழைக்கின்றனர். அல்லி, முல்லை போன்ற வெண்ணிற மலர்களும் மாலையிலே மலரும். காதல் வயப்பட்ட இளையவர்க்கு மாலைப் பொழுது துன்பந்தரும் பொழுதாக இருக்கிறது. வள்ளுவர் காம நோயை மலருக்கு உவமையாகக் கூறும் போது வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"காமநோயாகிய பூ காலைப் பொழுதிலே அரும்பாகி பகற் பொழுதெல்லாம் மொட்டவிழத் தொடங்கி மாலைப் பொழுதிலே முழுதாக மலர்ந்து நிற்கும்."

மாலைக் காலம் பகற் பொழுதையும் இரவுப் பொழுதையும் இணைக்கின்ற ஒரு சந்தியாகவும் உள்ளது. அதனால் ஒளியையும் இருளையும் இணைக்கும் பொழுதாகவும் உள்ளது. பகற்பொழுதின் நிறைவுக் காலமாக மாலைப் பொழுது விளங்குவதால் அந்திப் பொழுது எனவும் அழைக்கப்படுகிறது.

இப்பொழுதிலே "விளக்கேற்றல்" தமிழர் பண்பாட்டில் ஒரு சிறப்பான நடைமுறையாக உள்ளது. பண்டைக் காலத்தில் மின்சாரம் இல்லை. அதனால் நெய் விளக்குகளே பயன் படுத்தப்பட்டன. நெடுநல்வாடை என்னும் பழந்தமிழ் இலக்கியம் இந்நடைமுறையை விளக்கமாகப் பதிவு செய்துள்ளது.

இருள் பரவுவதற்கு முன்னர் ஒளி மங்கும். ஒரு குறுகிய பொழுதான மாலைப் பொழுதை "மம்மர்ப்பொழுது" எனவும் அழைப்பர். இப்பொழுதில் பார்வைக் குறைபாட்டால் பல பேரிடர்கள் தற்போது நிகழ்வதுண்டு. வையகம் எங்குமே மாலைப் பொழுது ஒரு தனித்துவமான பொழுதாகக் கணிக்கப்பட்டாலும் தமிழர் பண்பாட்டில் அது தனிச் சிறப்புப் பெற்ற பொழுதாகும் சிலப்பதிகாரம் என்னும் தமிழ்க் காப்பியத்தில் அந்திமாலைச் சிறப்புரைத்த காதை எனச் சிறப்பாக ஒரு பகுதியே உள்ளது.

## வெள்ளி நற்சிந்தனை 20



முனைவர் ச.மனோன்மணி

# இராசிபலன்

02.01.2026
மார்கழி 18, வெள்ளிக்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 6.55 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 8.24 மணிவரை
சுப நேரம் 6.30-8.00 மணிவரை
இராகுகாலம் 11.00-12.30 மணிவரை
இரவு நடேசர் ஆருத்திரா அபிசேகம்

சந்திராஷ்டமம்: விசாகம், அனுசம்

வளவன்



மேஷம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.



கடகம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



துலாம்

உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.



மகரம்

சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், உற்சாகமான நாள்.



ரிஷபம்

வழிபாட்டில் ஆர்வம் கூடும், வியாபார விருத்தியுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.



சிம்மம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொதுவாழ்வில் கௌரவம் கூடும்.



விருச்சிகம்

உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.



கும்பம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.



மிதுனம்

பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.



கன்னி

ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.



தனுசு

குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.



மீனம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்

நல்ல மனிதனின் பெருமை எல்லாத் திசைகளிலும் பரவி நிற்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 946





கரிகாலனுடைய காரசார மான வார்த்தைகளை கேட்ட போது சில சமயம் பழுவேட் டரையருக்கே உடைவாளின் மீது கை சென்றது. அப்போது சிரமப்பட்டு மனத்தையும் கையையும் கட்டுப்படுத்திக் கொண்டார். தம் உள்ளத்தில் முன்னம் தோன்றிய எண் ணத்தை நந்தினி வெளியிட் டுச் சொன்னவுடனே அவரு க்கு அவ்வளவு பதற்றம் உண் டாயிற்று.

"இல்லை, நந்தினி! இதைக் கேள்! எங்கள் பழுவூர்க் குலம் சோழ குலத்தோடு ஆறு தலைமுறையாக நட்பு ரிமை கொண்டது. அதை யெல்லாம் மறந்து, அறியாச் சிறுவன் ஒருவன் ஏதோ உள றினான் என்பதற்காக நான் அக்குலத்துக்கு விரோத மாய்க் கத்தி எடுக்க முடி யுமா? சுந்தர சோழரின் புதல் வனை, இன்று வரையில் பட்டத்து இளவரசனாயி ருப்பவனை, நான் என் கையி னால் கொல்லுவதா? இது என்ன பேச்சு?" என்று பழு வேட்டரையர் பதறினார்.

"ஐயா! தாங்கள் சோழக் குலத்தோடு ஆறு தலைமுறை யாக நட்புக் கொண்டவர்கள் உறவும் கொண்டவர்கள். ஆகையால் தாங்கள் கத்தி எடுக்கத் தயங்குவது இயல்பு. ஆனால் எனக்கு அத்தகைய உறவு ஒன்றுமில்லை. சோழக் குலத்துக்கு நான் எந்த விதத் திலும் கடமைப்பட்டவள் அல்ல. ஆதித்த கரிகாலன் தங்கள் அடிபணிந்து மன் னிப்புக் கேட்டுக் கொள் ளாவிட்டால், என் கையில் கத்தி எடுத்து நானே அவ னைக் கொன்று விடுகிறேன்?" என்றாள் நந்தினி. அப்போது அவளுடைய கண்கள் சிவ ந்து, புருவங்கள் நெரிந்து முகத்தோற்றமே மாறி விட் டது.

### 39 ஆம் அத்தியாயம்
### "விபத்து வருகிறது!"

பழுவேட்டரையர் சிரித் தார். நந்தினியின் வார்த்தை யைக் கேட்டுப் பரிகாசமாகச் சிரிப்பதாய் எண்ணிக் கொண்டு இலேசாகத்தான் சிரித்தார். அந்தச் சிரிப்பின் ஒலியால் அந்த அறையும் அதிலிருந்த சகல பொருட் களும் நடுநடுங்கின.

தம்மை அவமதித்தவர் களை நந்தினி தன் கையி னாலேயே கத்தி எடுத்துக் கொன்றுவிடுவதாகக் கூறி யதைக் கேட்ட போது அவரு டைய உள்ளத்தில் ஒரு பெரு மிதம் உண்டாயிற்று. தம்முடைய மரியாதையைப் பாதுகாப்பதில் நந்தினிக்கு அவ்வளவு அக்கறை இருக் கிறது என்பதை அறிந்ததில் பழுவேட்டரையருக்கு இறு மாப்பு ஏற்பட்டது. அதே தோரணையில் அவள் மேலும் பேசிக் கேட்க வேண்டு மென்ற ஆசை அவர் மன தில் ஒரு பக்கம் பெருகி யது. மற்றொரு பக்கத்தில் அவள் அம்மாதிரியெல்லாம் பேசுவதைத் தாம் விரும்ப வில்லை என்று காட்டிக் கொள்ளவும் ஆசைப்பட் டார்.

"ஐயா! ஏன் சிரிக்கிறீ ர்கள்! என் வார்த்தையில் அவநம்பிக்கையினால் சிரிக் கிறீர்களா?" என்று கேட் டாள்.

"தேவி! மந்தார மலரின் இதழைப் போல் மென்மை யான உன் கையினால் கத் தியை எப்படி எடுப்பாய் என்று எண்ணிச் சிரித்தேன். மேலும் நான் ஒருவன் இர ண்டு நீண்ட கைகளை வைத் துக் கொண்டு உயிரோடி ருக்கும்போது.."

"ஐயா! தங்கள் கரங்க ளின் பெருமையையும் வலி மையையும் நான் அறிவேன்.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## நன்றி நவில நல்ல வழி



உழவன் ஒருவன் தனது மாட்டு வண்டியில் பெரிய மூட்டை ஒன்றை ஏற்றிக் கொண்டு வெளியூர் சென் றான். வழியில் ஒரு மேட் டில் வண்டி செல்லவேண்டி வந்தது. பாரம் பார்த்து வைக்கப்படாததால் வண் டியில் இருந்து மூட் டைகள் வெளியே வந்து விழுந்தன. வண்டியை நிறுத்திய உழவன் "யாராவது உதவி செய்தால் தான் இந்தக் கன மான மூட்டையை வண் டிக்குள் போடமுடியும். என் ஒருவனால் முடியாது. இதுவோ ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியாக உள்ளது, என்ன செய்வது என்று சிந்தித் தான்.

சிறிது நேரம் சென்றது தொலைவில் யாரோ குதி ரையில் வருவது அவனுக்குத் தெரிந்தது. அதுயாராக இருந் தாலும் நிறுத்தி அவனிடம் உதவி கேட்கலாம் என்று நினைத்தான்.

குதிரை நெருங்க நெருங்க அதில் அமர்ந்திருப்பது யார் என்று அவனுக்குத் தெரிந் தது. நமது ஊரிலே உள்ள பெரிய செல்வந்தர் அல்லவா வருகிறார். அது மட்டு மில்லை அவர் எல்லோரது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவராயிற்றே. அவரை நிறுத்தி எனக்கு இணையாக இந்த மூட்டையைப் பிடித்து வண்டிக்குள் போடுங்கள் என்று எப்படிக் கேட்பேன். என்று நினைத்துக் குழம் பினான். குதிரை அருகே நெருங்கியது. அதிலிருந்து இறங்கிய அவர் "மூட்டை கீழே விழுந்துவிட்டதா, பார்த்து ஏற்றக் கூடாதா? சரி.. சரி.. ஒரு கை கொடு, இருவரும் சேர்ந்து இந்த மூட்டையை வண்டிக்குள் ஏற்றி விடலாம் என்று கூறினார்.

இருவரும் சிரமப்பட்டு அந்த மூட்டையை வண்டிக் குள் ஏற்றினார்கள். உழவ னால் பேசமுடியவில்லை. அவன் தழுதழுத்த குரலில் ஐயா தாங்கள் செய்த இந்த உதவிக்கு நான் என்ன கைமாறு செய்யப் போகின் றேன்? என்று சொன்னான்.

அதற்கு அவர், மிக எளிது. இது போன்ற வேறு யாரா வது துன்பப் பட்டால் நீ அவர்களுக்கு உதவி செய், அதுவே நீ எனக்கு செய்யும் கைம்மாறு என்று சொல்லி விட்டு குதிரையில் ஏறிப் பறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தவனாக இரு, சிறந்ததை வைத்திரு, சிறந்ததை செய்

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கின் சுற்றுலாத்துறையை மேம்படுத்த யாது செய்தல் வேண்டும்

இலங்கையின் வெளிநாட்டு வருமானத்தில் சுற்றுலாத்துறை கணிசமான இடத்தை வகிக்கிறது.

தனித்து அந்நிய செலாவணியை ஈட்டுதல் என்பதற்கு அப்பால், உள்நாட்டில் வேலை வாய்ப்பு என்ற விடயத்திலும் சுற்றுலாத்துறை கணிசமான வகிபங்கைக் கொண்டுள்ளது.

அதிலும் தென்பகுதியில் சுற்றுலாத்துறை உச்சமாக அபிவிருத்தியடைந்துள்ளதெனலாம்.

அவ்விதம் சுற்றுலாத்துறை உச்சமடைந்திருப்பதனூடு நட்சத்திர விடுதிகள், இதர தங்குமிடங்கள், உணவுப் பண்டங்கள் என்பவற்றைக் கடந்து, எங்கள் நாட்டின் பாரம்பரிய பொருட்களைக் கொள்வனவு செய்வதிலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதீத ஆர்வம் காட்டுகின்றனர்.

தவிர, இலங்கைக்கு வருகின்ற உல்லாசப் பயணிகள் இலங்கையின் வரலாற்றை அறிவதிலும் இங்குள்ள இயற்கை வளத்தைப் பார்த்து இரசிப்பதிலும் தீவிரம் காட்டுகின்றனர்.

ஆயினும் எங்கள் வட மாகாணத்தில் சுற்றுலாத்துறை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதென்ற உண்மையை இங்கு கூறித்தானாக வேண்டும்.

எனினும் தற்போது வட மாகாணத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதான செய்திகள் மன ஆறுதலைத் தருகின்றன.

உண்மையில் வட மாகாணத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதாயின், எங்கள் தமிழ் இனத்தின் வரலாறு பேசப்படவேண்டும்.

எங்கள் மண்ணில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் வீதியெங்கும் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

எங்களின் ஆதிகால வரலாற்றை நாம் கூறும்போதுதான், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதில் ஆர்வம் கொண்டு எமது பகுதிக்கு வருகை தருவர்.

அந்தவகையில் மன்னாரையும் இராமேஸ்வரத்தையும் இணைக்கும் இராமர் பாலம் ஒரு பெரும் சரித்திரத்தைக் கூறுகிறது.

அதேபோன்று 7ஆம் நூற்றாண்டில் அவதரித்த திருஞானசம்பந்த நாயனாரும் 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் பாடிப்பரவிய மன்னார் மாதோட்ட நன்னகரில் வீற்றிருக்கும் திருக்கேதீச்சரநாதனின் பெருமை, மாதோட்டத் துறைமுகம் என்பன எடுத்துரைக்கப்பட வேண்டியவை.

இந்த வரலாற்றை உள்ளடக்கியதான புலக்காட்சிகள் மன்னார் நகரத்தில் தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளதான தகவல் சுற்றுலாத்துறையில் வடக்கு மாகாண நிர்வாகம் சரியான பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளதென்பதைச் சுட்டி நிற்கிறது.

இதுபோல யாழ்.நகர் – காங்கேசன்துறை வீதி எங்கும் மாவிட்டபுரத்தின் வரலாறு காட்சியாக வேண்டும்.

அதேபோன்று தீவகத்தின் பழம்பெரும் வரலாறு – பசுத்தீவு எனப் போற்றப்படும் நெடுந்தீவின் தொன்மை – சக்திபீடமாகிய நயினாதீவு நாகபூசணி அம்மனின் அற்புதம் என்பன காட்சியாகும்போது அவை சுற்றுலாப் பயணிகளை நிச்சயம் ஈர்க்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, நெடுந்தீவு சுற்றுலாத்துறைக்கான தக்க இடம் என்பதையும் கருத்தில் கொண்டு செயலாற்றினால், வடக்கில் சுற்றுலாத்துறை மிக விரைவாக வளம் பெறும்.

# குருந்தூர்மலையில் அன்று நடந்தேறியதே

## கல்லுமலையில் இன்று அரங்கேற்றப்படுகிறது

## மக்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை

வவுனியா, சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயப் பகுதியில் தொல்லியல் எச்சங்களைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு, பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் குற்றம் சாட்டியுள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் வவுனியா - சமளங்குளம், கல்லுமலை பிள்ளையார் ஆலயத்திற்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தோம். அங்கு தொல்லியல் எச்சங்களைப் பாதுகாக்கின்றோம் என்ற போர்வையிலே பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கான அடித்தளம் இடப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆரம்பத்தில் குருந்தூர்மலையிலும் இதே போன்ற ஒரு நிலைமையே காணப்பட்டது. தற்போது அங்கு முழுமையான விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அதே போன்றதொரு தந்திரோபாயமே இங்கும் கையாளப்படுகிறது எனச் சுட்டிக்காட்டினார்.

ஆலய நிர்வாகத்தினரையும் மக்களையும் தொல்லியல் திணைக்களம் மக்களைக் குழப்பி தங்களுக்குச் சார்பாகத் திசைதிருப்ப முனைகிறது. ஆலயத்தைத் திருத்த உதவி செய்கிறோம், நீங்கள் தொடர்ந்து ஆலயத்தைக் கட்டலாம் எனக் கூறப்படும் சலுகைகள் யாவும் மக்களைச் சமாளிப்பதற்கான தற்காலிக உத்திகள் மட்டுமே.

ஜே.வி.பி உள்ளிட்ட சில தரப்புகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காகவும், சுயநலத்திற்காகவும் ஒரு சிலர் மக்களைக் குழப்பி வருகின்றனர். எதிர்காலத்தில் இப்பகுதி மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு, அவர்களது வாழ்வாதாரம் முற்றாக அழிக்கப்படும் அபாயம் உள்ளது.

இந்த ஆபத்தை உணராத வரைக்கும் சமளங்குளம் மண்ணைக் காப்பாற்ற முடியாது. எனவே, தமிழர் தாயகப் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் இவ்வாறான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகத் தமிழ்த் தேசியத் தரப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து எதிர் வினையாற்ற வேண்டும் என அவர் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார். (ம-7)

## வீதியை விட்டு விலகி

## தென்னை மரத்துடன் மோதி கார் விபத்து

அம்பலாங்கொடை - கொடகம பகுதியில் நேற்றுக் காலை கார் ஒன்று சாலையை விட்டு விலகி சாலையோரத்தில் இருந்த தென்னை மரத்தில் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வீதியின் குறுக்கே திடீரென பாய்ந்த பாதசாரியை காரின் சாரதி காப்பாற்ற முயன்ற போதே கார் விபத்தில் சிக்கியுள்ளது.

கார் வீதியை விட்டு விலகி வீதியோரத்தில் இருந்த தென்னை மரத்தில் மோதி பின்னர் மரத்தின் அடிப்பகுதியில் விழுந்ததாகவும் இவ் விபத்தில் சாரதி காயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாகவும் அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## அரச நிறுவனங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்

### சைபர் பொலிஸார் தீவிர விசாரணை

*(கொழும்பு)*

முக்கிய அரச நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்ட குண்டு மிரட்டல்கள் தொடர்பில் பொலிஸ் சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

நாட்டில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தும் நோக்குடன் கண்டி மாவட்டச் செயலகம், பூஜாப்பிட்டிய, நாவலப்பிட்டி மற்றும் பஸ்பாகே கோரல ஆகிய பிரதேச செயலகங்களுக்கும், கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி கத்தார் ஏர்வேஸ் விமானத்திற்கும் மின்னஞ்சல் ஊடாக குண்டு மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான மிரட்டல்களின் பின்னணியில் உள்ளவர்களைக் கண்டறிய துரித விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## மாணிக்கவாசகர் மடாலயத்தின் 100ஆவது ஆண்டு ஆரம்பவிழா

*(காரைநகர்)*

காரைநகர் ஈழத்து சிதம்பரம் - மாணிக்கவாசகர் மடாலயத்தின் 100ஆவது ஆண்டு நிறைவின் ஆரம்பவிழா நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன்போது மாணிக்கவாசகர் சொல்ல தில்லைக் கூத்தன் வரைந்தருளிய திருவாசக பாராயணம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து தென்னவன் பிரம்மராஜனான மாணிக்கவாச சுவாமிகளுக்கு விஷேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றன.

பின்னர் மாணிக்கவாசகரின் பிரம்மாண்ட திருவுருவப்படம் திரை நீக்கம் செய்யப்பட்டு, மாலை அணிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணிக்கவாசகர் மடாலயம் பற்றி தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் அவர்களும் மனிதனின் பிறவிப்பிணி போக்கும் திண்ணபுரம் பசிப்பிணி போக்கும் மாணிக்கவாசகர் மடாலயம் எனும் தொனிப்பொருளில் மடாலய போசகர் க.கு.க சிவபாலனும் சிறப்புரையாற்றினர்.

இதன்போது மாணிக்கவாசகர் மடாலயத்தின் பரம்பரை குருக்களான ஈஸ்வரக் குருக்கள் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து மாகேஸ்வர பூஜை இடம்பெற்றது. (ம-7,104)

### புத்தாண்டில் பொலிஸார் அதிரடி

## 150 கிலோ கஞ்சா மீட்பு கஞ்சா செடிகள் அழிப்பு

ஹம்பேகமுவ, மீகஹகிவுலப் பகுதியில் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்த விசேட நடவடிக்கையின் போது, சுமார் 150 கிலோ கிராமுக்கும் அதிகமான கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே பகுதியில் முன்னெடுக்கப்பட்ட மற்றுமொரு தேடுதல் நடவடிக்கையின் போது, சுமார் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த 30,000 க்கும் மேற்பட்ட கஞ்சா செடிகள் கண்டறியப்பட்டதுடன், அவை தொடர்பான இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசோக தர்மசேனவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே 'இந்தச் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2026

## அதிஷ்டம் உங்களைத் தேடி வரும்



**அன்பான பண்பான கடக இராசியினரே தாயன்பு நிறைந்த கடக இராசியினருக்கு 2026 ஆம் ஆண்டு விபரீத ராஜயோகத்தை கொடுக்கக் கூடிய ஆண்டாக அமையப் போகிறது.**

கெட்டவன் ராகு அஷ்டமஸ்தானத்தில் இருப்பதால் அதிர்ஷ்டம் உங்களைத் தேடி வரும்.

தடை, தாமதங்கள் விலகும் வருடம். மனசங்கடங்கள் அகலும். ஞாபகசக்தி அதிகரிக்கும். தைரியமும் தெம்பும் குடிபுகும். நினைப்பது நடக்கும். அன்றாட பணிகளில் திறம்பட செயற்பட முடியும். ஏற்றமான பலன்கள் உண்டாகும். ஆத்ம ஞானம் கிடைக்கும். உடலுக்கும் ஆன்மாவுக்கும் புத்துணர்வு தரும் நல்ல நிகழ்வுகள் நடக்கும்.

### குருவின் சஞ்சார பலன்கள்

கடக இராசிக்கு 6,9 ஆம் அதிபதியான குரு பகவான் வருட ஆரம்பத்தில் 12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஜூன் 2, 2026 வரை விரயத்தை கட்டுப்படுத்த வேண்டிய வருடம். அதன் பிறகு இராசிக்கு வந்து ஜென்ம குருவாக உச்சம் பெற போகிறார். திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் இழப்புகளிலிருந்து மீள முடியும்.

தொழில் கூட்டாளிகள், வாடிக்கையாளர்கள், நண்பர்களால் வீண் விரயங்கள் ஏற்படலாம். வியாபாரத்தில் பெரிய அளவில் பண முதலீடு செய்ய வேண்டாம். யாருக்கும் பெரிய பணம் கடனாக கொடுக்க வேண்டாம்.

சிலருக்கு சுப விரயங்கள் மிகுதியாகும். சிலர் தொழில், உத்தியோகம் அல்லது உயர் கல்விக்காக வெளிநாடு செல்லலாம். பண வரவுகள் தாராளமாக இருந்தாலும் தவிர்க்க முடியாத விரயங்களை சந்திக்க நேரும். சேமிப்பு கரையும். கொடுக்கல், வாங்கலில் பெரிய தொகைகளை ஈடுபடுத்தும் போது கவனம் தேவை. ஜாமீன் பொறுப்பு ஏற்கக் கூடாது. சிலருக்கு திருமணம், வீடு, வாகனம் என சுப செலவுகளும் ஏற்படலாம்.

வேலை பார்க்கும் இடத்தில் பிறர் விடயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. பங்கு வர்த்தகர்கள் புத்திசாலித்தனத்துடன் செயற்படுவது அவசியம். விரயமும் இழப்பும் எந்த விதத்தில் வேண்டுமானாலும் இருக்கலாம் என்பதால் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

### சனியின் சஞ்சார பலன்கள்

கடக இராசிக்கு 7,8ஆம் அதிபதியான சனிபகவான் 9ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எதிர்மறை எண்ணங்கள் விலகும். கவலைகள் அகலும். உற்சாகமாக, ஆரோக்கியமாக இருப்பீர்கள். எதிர்பார்த்த முன்னேற்றங்களால் மனம் மகிழும். தொட்டது துலங்கும். கொடுத்த கடன்கள் வசூலாகும். சிலர் புதிய கூட்டுத் தொழில் தொடங்கலாம் அல்லது பழைய தொழிலை விரிவாக்கம் செய்யலாம். புதிய தொழில் ஒப்பந்தங்கள் கிடைக்கும். பணியில் எதிர்பார்க்கும் உயர்வுகள், இட மாற்றம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது.

புதிய வேலை தேடுபவர்களுக்கு தகுதிக்கு ஏற்ற வேலை கிடைக்கும். கருத்து வேறுபாட்டுடன் வாழ்ந்த தம்பதிகளுக்குள் நல்ல புரிதல் உண்டாகும். திருமணம், குழந்தைப் பேறு, வேலை வாய்ப்பு, சொத்துச் சேர்க்கை போன்றவற்றில் நிலவிய தடைகள் அகலும். தேவைக்கேற்ற தன வரவால் குடும்பத்தில் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். அழகு, ஆடம்பர நவீன பொருட்கள், தங்க, வெள்ளி நகை சேர்க்கை அதிகரிக்கும். அரசியல் பிரமுகர்களுக்கு மிக சாதகமான நேரம். தந்தையின் ஆரோக்கியம் சார்ந்த விடயங்களில் மிகுந்த கவனம் தேவை. உற்றார், உறவினர்களிடம் விட்டுக் கொடுத்து அனுசரித்து செல்லும் போது வீண் மனஸ்தாபங்களைத் தவிர்க்கலாம்.

### ராகு கேதுவின் சஞ்சார பலன்கள்

கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம். பொதுவாக அசுப கிரகங்கள் மறைவு ஸ்தானத்திற்கு வருவது நல்லது.அந்த வகையில் அசுப கிரகமான ராகு பகவான் எட்டாம் இடத்திற்கு செல்வதால் சில அதிர்ஷ்டம் சார்ந்த விடயங்கள் உங்களுக்கு கை கொடுக்கும். ராகுவிற்கு குருப் பார்வை இருப்பதால் அதிர்ஷ்டம் பேரதிர்ஷ்டமாக வாய்ப்பு உள்ளது.

எல்லா செயல்களையும் எளிதாக சமாளித்து விடுவீர்கள். விபரீத ராஜயோகம் உங்களை வழிநடத்தப் போகிறது. வீடு, மனை சம்பந்தப்பட்ட விடயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். பல வருடங்களாக சொத்தில் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் தாமாகவே வெளியேறுவார்கள்.

அடமான நிலங்களை மீட்கத் தேவையான பண உதவி கிடைக்கும். வீடு மாற்றம், வேலை மாற்றம் அல்லது [illegible] அவரவர் விரும்பிய மாற்றங்கள் உண்டாகும். பங்குச் சந்தை முதலீடுகளால் உபரி வருமானம் உண்டாகும். உடன் பிறந்த சகோதர, சகோதரிகளின் சுப செலவிற்காக ஒரு தொகையை செலவு செய்ய நேரும். வேலைப் பளு இருந்தாலும் எல்லா பணிகளையும் திறம்பட செய்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த அதிகார மிக்க பதவிகளைப் பெறுவீர்கள். சிலருக்கு பிறரின் பொறாமை குணத்தால் கண் திருஷ்டி உருவாகலாம். இந்த காலகட்டங்களில் அரசின் சட்ட திட்டங்களை மதிப்பது நல்லது.




### புனர்பூசம் 4

கடக இராசி புனர்பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெயர், புகழ், அந்தஸ்து உயரும் அனுகூலமான வருடமாக அமையும்.கௌரவப் பதவிகள், குல தெய்வ அனுக்கிரகம் கிடைக்கும்.வியாபாரத்தில் நிலவிய மந்த நிலை நீங்கி நல்ல முன்னேற்றமான பலன்கள் ஏற்படும்.

எந்தப் பிரச்சினையை எப்படி சமாளிப்பது என்று தெரிந்து அதன்படி செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்த சகோதர, சகோதரிகளால் பூர்வீகச் சொத்தில் நிலவிய மன உளைச்சல் குறையும். சொந்த வீட்டிலிருந்து வாடகை வீட்டிற்குச் சென்றவர்கள் மீண்டும் சொந்த வீட்டிற்குச் செல்வார்கள்.

அடமானச் சொத்து, நகைகளை மீட்கக் கூடிய சூழ்நிலை உருவாகும். பூர்வீக சொத்து தொடர்பான பேச்சுவார்த்தையை குடும்ப பெரியவர்களின் முன்பு நடத்துவது நல்லது. தாயின் ஆரோக்கிய குறைபாடு அகலும்.விவசாயிகள் பல வருடங்களாக பயன்படாமல், பயிரிட முடியாமல் கிடந்த தரிசு நிலங்களில் போதிய மழைப் பொழிவால் விவசாயம் செய்யலாம். திருமணத் தடைகள் அகலும்.மேலதிகாரி, முதலாளிகள், சக ஊழியர்களால் ஏற்பட்ட தொந்தரவு அகலும். இறை வழிபாட்டால் மகிழ்ச்சியை அதிகரிக்க அஷ்டலட்சுமியை வழிபடவும்.

### பூசம்

எண்ணியது ஈடேறும் வருடம். வாழ்க்கையை நகர்த்துவதில் இருந்த சிரமங்களை சீராக்கி நிம்மதி அடைவீர்கள்.பொருளாதார ஏற்றத் தாழ்வு சமனாகி வட்டிக்கு வட்டி கட்டிய நிலைமாறும். சொல்வாக்கால் மற்றவர்களால் மதித்திடக்கூடிய நிலையை அடைவீர்கள்.விலகிய குடும்ப உறவுகள் நட்பு பாராட்டுவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அரச ஊழியர்களுக்கு விரும்பிய ஊருக்கு வேலை மாற்றம், பதவி உயர்வு உண்டாகும். செய்தி, தகவல் தொடர்பு, ஆலோசனை வழங்கி புத்தியைத் தீட்டி சம்பாதிப்பவர்களின் வருமானம் இரட்டிப்பாகும். அரசியல் பிரமுகர்களுக்கு கட்சி மேலிடம் மற்றும் தொண்டர்கள் மத்தியில் ஏற்பட்ட பகை அகலும். குடும்பத்தை விட்டு பிரிந்தவர்கள் மீண்டும் இணையும் வாய்ப்பு உண்டாகும்.

8 ஆம் இட ராகுவை சமாளிக்க தம்பதிகள் விட்டுக் கொடுத்துச் செல்வது அவசியம். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும். வீடு, வாகனம், தொழில் போன்றவற்றிற்கு விண்ணப்பித்த கடன் கிடைக்கும். தேவையற்ற பயணங்களை தவிர்ப்பதன் மூலம் டென்சன், அலைச்சல் குறையும்.சிவ வழிபாடு செய்வதன் மூலம் எண்ணியதை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

### ஆயில்யம்

கடக இராசி ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு 2026 ஆம் ஆண்டு மிகச் சாதகமாக உள்ளது. வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாக்வும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். எதிர்ப்புகள் விலகும். காரியத் தடைகள் நீங்கும்.

அனைத்து வேலைகளும் சிறிய முயற்சியிலேயே சிறப்பாக நடைபெறும். தடைகளை தகர்த்து வெற்றிநடை போடுவீர்கள். உடலிலும் உள்ளத்திலும் புதிய தெம்பு, தைரியம் குடிபுகும். வைத் தியம் பலன் தரும். தொழிலில் இருந்து வந்த தேக்க நிலை அடியோடு மாறி நிறைவான இலாபம் காண்பீர்கள். தடைபட்டிருந்த வீடு கட்டும் பணிகள் நிறை வடையும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் வேகம் பிடிக்கும்.

வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை கூடும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் மும்முரமாக ஈடுபடுவீர்கள்.புத்திர பாக்கியம், திருமணம் போன்ற தடைபட்ட அனைத்து விதமான பாக்கிய பலன்களும் நடைபெறும். புத்திரர்கள் வழியில் மனம் மகிழும் சம்பவங்கள் நடைபெறும். குடும்ப உறுப்பினர்கள் ஆதரவாக செயற்படுவார்கள். மருமகனால் ஏற்பட்ட சங்கடங்கள் அகலும். ஸ்ரீ சரபேஸ்வரரை வழிபட 2026 ஆம் ஆண்டு ராஜயோகம் உண்டாகும்.

**பரிகாரம்:** கடக இராசியில் பிறந்தவர்கள் 2026 ஆம் ஆண்டு மாரியம்மனை வழிபட சாதகமான பலன்கள் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேகாலை...

கொலை செய்யப்பட்டுள்ளனர்.

புத்தாண்டு தினமான நேற்று இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

119 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

ஆயுதமொன்றால் தாக்கப்பட்ட நிலையில் காயமடைந்த மூவரும் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.01.01
சீட்டிழுப்பு இலக்கம் 6061
H 4 7 4 5 0 0
அத சம்பத
H 4 5 0 0
சீட்டிழுப்பு இலக்கம் 0636
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.01.01
177
கன்னி 27 39 46
1201

தன நிதானய
திகதி - 2026.01.01
சீட்டிழுப்பு இலக்கம் - 2091
Q 16 20 37 42 Q
Double Chance

மெகா பவர்
திகதி 01/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2409
U 21 18 23 31 76

ஜய JAYA
திகதி 2026.01.01
சீட்டிழுப்பு இலக்கம் 0329
A 3 5 1 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4303
சீட்டிழுப்பு திகதி 01.01.2026
R 22 33 39 62
R
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.01
சீட்டிழுப்பு இலக்கம் 1370
கடகம் 13 15 34 50 கடகம்


## தலதா மாளிகை...

புத்தாண்டை முன்னிட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகைக்கு நேற்றுக் காலை விஜயம் செய்து வழிபாட்டில் ஈடுபட்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றார்.

தலதா மாளிகை வளாகத்தில் நடைபெற்ற மத வழிபாடுகளில் பங்கேற்றதோடு, புத்தாண்டை முன்னிட்டு தலதா மாளிகையைத் தரிசிக்க வந்த மக்களுடன் சுமுகமான உரையாடலில் ஜனாதிபதி ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து, மல்வத்து விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, மல்வத்து மகாநாயக்க தேரர் அதிவணக்கத்திற்குரிய திப்பெட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரைச் சந்தித்து, அவரது நலம் விசாரித்ததோடு அவருடன் சிறு கலந்துரையாடலில் ஈடுபட்டார். (ம-7)

## சமையல்...

நிறையுடைய லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை 150 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 12.5 கிலோகிராம் நிறையுடைய லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் புதிய விலை 4250 ரூபாயாகும்.

அதேநேரம் 5 கிலோகிராம் நிறையுடைய லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை 65 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 5 கிலோகிராம் நிறையுடைய லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் புதிய விலை 1710 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சர்வதேச...

பார்வையிட்டார் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர்.

மண்டைதீவுப் பகுதியில் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான அடிக்கல்லினை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாட்டியிருந்த நிலையில், மைதானத்தில் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பமாகி, எதிர்வரும் 14ஆம் திகதி சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒன்றினை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

அந்நிலையில், நாட்டில் ஏற்பட்ட பேரிடரால் பணிகள் காலதாமதமாகிய நிலையில், மீண்டும் பணிகள் முழு வீச்சுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மைதானம் அமையவிருக்கும் பிரதேசம் நீரேந்து பிரதேசம் எனவும், வலசை பறவைகள் உள்ளிட்ட பறவைகள் வரும் ஒரு பறவைகள் சரணாலயம் போன்ற பிரதேசத்தில் மைதானம் அமைக்கப்படுவதால் சுற்று சூழலுக்கு பாதிப்பு என பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## சட்டவிரோத...

சபையின் ஆளுகைக்குட்பட்ட தையிட்டிப் பகுதியில் தனியார் காணியில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரையை சட்டவிரோத கட்டிடம் என அடையாளப்படுத்தும் வகையில் பெயர்ப் பலகையை மூன்று மொழிகளிலும் நாட்ட பிரதேச சபை அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியது.

இந்நிலையில் பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் வலிகாமம் வடக்கு பிரதேச சபை செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அந்த அறிவுறுத்தலில்,

தையிட்டி விகாரைக்கு முன்பாக சட்டவிரோத கட்டிடம் எனப் பெயர் பலகை நடப்படப் போவதாகப் புலனாய்வுப் பிரிவு மூலம் தகவல் கிடைத்துள்ளது.

அதன்படி இவ்வாறான அறிவித்தல் பலகை காட்சிப்படுத்துவதன் மூலம் பௌத்தம் மற்றும் இந்து சமயத்துக்கு இடையிலான நல்லிணக்கத்தில் முரண் நிலை தோன்றுவதுடன் சமாதான சீர்குலைவு ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது.

இவ்வாறான பெயர் பலகை வலிகாமம் வடக்குப் பிரதேச சபையினாலோ வேறு அமைப்புகள் மூலமோ நிறுவனங்கள் மூலமோ காட்சிப்படுத்தும் நோக்கம் இருப்பின் அதை சட்டரீதியாக மேற்கொள்ளுமாறும் சட்டரீதியற்ற முறையில் அவ்வாறு அறிவித்தல் பலகையை நாட்ட நடவடிக்கை எடுத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றோம் என்றுள்ளது.

குறித்த விடயத்தை நேற்று முன்தினம் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் விசேட அமர்வில் பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் வெளிப்படுத்தினார்.

அதன்படி, தனியார் காணிக்குள் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட கட்டிடம் என்ற வகையில் எமது பிரதேச சபையின் சட்ட ஆலோசகரின் ஆலோசனைப்படி பெயர் பலகை அமைக்கை நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது. (ம-7,33)

## தேசிய...

தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் மஞ்சுளா விதானபத்திரன தற்காலிகமாக பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளார்.

புதிய கல்வி சீர்திருத்தத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டபாடசாலைகளுக்காக விநியோகிக்கப்பட்ட 6ஆம் தரத்திற்கான பாடத்தொகுதியில் பொருந்தமற்ற இணையத்தளம் ஒன்றின் பெயர் ஒன்று உள்ளடக்கப்பட்டுள்ளமையினால் பாரிய சர்ச்சை வெடித்தது.

அதனை கல்வி அமைச்சும் உறுதிப்படுத்தியுள்ளதுடன், இது தொடர்பில் விசாரணையினை நடத்துமாறு கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.01.2026 வெற்றி வாரம் 0769
X 2 6 2 4 2 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,839,009.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3035
சீட்டிழுப்பு திகதி 2026.01.01 தினம் வியாழக்கிழமை
21 22 30 54 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.86,078,608.00
DLB

சனிதா
திகதி 01.01.2026 வெற்றி வாரம் 5196
08 44 45 75 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,636,974.40
DLB

சசிரி
வெற்றி வாரம் 865
சீட்டிழுப்பு திகதி 01.01.2026
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 21 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4747
சீட்டிழுப்பு திகதி 01.01.2026 தினம் வியாழக்கிழமை
02 21 54 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,973,560.00
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 32 01 31 50 52
2211
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.617,245,371.00
01.01.2026 வியாழக்கிழமை
DLB

வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2861
சீட்டிழுப்பு திகதி: 2026.01.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,397,068.00
அட கோடிபதி ADA KOTIPATHI
20 23 43 60 Y
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Voyzant இந்தியா கோவில்கள்

ஆறுபடை வீடு | திருப்பதி | திருநாகேஸ்வரம் | இராமேஸ்வரம்
சிதம்பரம் | ஸ்ரீரங்கம் | வைத்தீஸ்வரன் | மேல்மருவத்தூர்
திருவண்ணாமலை | மதுரை மீனாட்சி | திருவெண்ணெய்நல்லூர் | சங்கரப்பாணி
திருவானைக்கா | காஞ்சிகாமாட்சி | ராமர்கோவில் | திருக்கடவூர்

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்

189,000/= (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு)

இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து – தங்குமிடம்

10 நாட்கள் | Voyzant (PVT) Ltd | புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church அருகில்)

077 284 9535, 021 222 6866


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கரவெட்டி நெல்லியடி சிக்னல் சந்தியிலிருந்துகொடிகாமம் பிரதான வீதியில் 500m தூரத்தில் 18 பரப்புக் காணி இரண்டு பரப்பாக பிரித்து தரப்படும். குடியிருப்புச் சூழல், நன்னீரூற்று வளங்கள் உண்டு. இந்தக் காணிகளை மொத்தமாகவும் இரண்டாகவும் பிரித்தும் தரப்படும்.

இன்னும் சில துண்டுகளே விற்பனைக்குள்ளது.

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்:

077 639 4409, 076 153 2094

(6425)

## மாப்பிள்ளை தேவை

01. இருபாலை. இந்து. 1997. ரோகிணி. IT degree ayurvedic doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55043)
02. சுன்னாகம். இந்து. 1988. பரணி. MSc(UK), UK citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54543)
03. கரவெட்டி. இந்து. 1988. சுவாதி. Phd in Bio Chemistry, Germany citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54321)
04. சாவகச்சேரி. இந்து. 1994. அஸ்தம். BDS (University of Jaffna), Dental doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54201)
05. இருபாலை. இந்து. 1998. உத்தராடம். HNDA in Accounting மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (49646)
06. அச்சுவேலி. இந்து. 1995. பூசம். B.Com Accountant, Australia citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (43129)
07. அச்சுவேலி. இந்து. 1992. ரோகிணி. BSc(Hons) in biological science மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (41136)
08. கந்தரோடை. இந்து. 2000. திருவாதிரை. Software Engineering மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (35870)
09. இளவாலை. இந்து. 1987. திருவாதிரை. Dentist doctor, canada citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32087)
10. சுன்னாகம். இந்து. 1995. திருவாதிரை. BSc(Hons) Micro biology, translational data scientist மணப் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30662)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P | www.thaalee.com | 077 539 3728

(6458)


வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378,
076 097 3127



KBK கொழும்புத்துறை

## தரம் 10 - 11 இற்கான வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

ஆரம்பம் : 03.01.2026 (சனி)

நேரம் : மாலை 06.00 மணி

தமிழ், ஆங்கில மொழி மூலம்

நேரடியாகவும், ZOOM ONLINE ஊடாகவும் நடைபெறும்

ஆசிரியர்
MR.K.BALAKAJEN
RESOURCE PERSON
B.COM (Jaf)
H.N.Dip -in - Acc (ATI)
Dip - in - Edu (OUSL)
M.Com (HONS), Acc.spl

(C-4727)

Contact : 077 452 0043


## வலி.வடக்கு...

படி நீதிமன்றப் பதிவாளரால் அழைப்புக் கட்டளை அனுப்பப் பட்டுள்ளது.

குறித்த அழைப்பாணையில் எதிர்வரும் ஐந்தாம் திகதி பிரதேச சபை உறுப்பினர்கள் 11 பேரையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் 21ம் திகதி தையிட்டி விகாரையின் முன்பாக விகாராதிபதியின் பதவி உயர்வுக்கு எதிராக வலிகாமம் வடக்கு பிரதேசசபை உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

# மரண அறிவித்தல்



## வயித்திலிங்கம் பரமேஸ்வரி

(கண்ணன் அம்மா, பகவதி)

தோற்றம் 10.11.1952 | மறைவு 01.01.2026

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 119/3 முன் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் பரமேஸ்வரி அவர்கள் நேற்று 01.01.2026 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வயித்திலிங்கம் - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - மகேந்திரம் தம்பதியினரின் அன்பு மருமகளும் வயித்திலிங்கம் (உரிமையாளர்:- கண்ணன் லொட்ஜ் - பரமேஸ்வராச் சந்தி) அவர்களின் பாசமிகு மனைவியும் சாந்தி(லண்டன்), சதீஸ்குமார் (கனடா), லோகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரவிகரன் (லண்டன்), சசிமாலா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆர்த்திகா, ஆகிஷ்(லண்டன்), அக்சரா, பிரித்தீஷா, ஈழவன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி - பத்மநாதன், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சத்தியரூபவதி - சச்சிதானந்தம் மற்றும் தர்மாம்பிகை - திருச்செல்வம்(லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2026) வெள்ளிக் கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 119/3,
முன் ஒழுங்கை,
[illegible]

கணவர் - 077 446 5417
சதீஸ் - 647 545 6363(கனடா)
சாந்தி - 447 498 298 279(லண்டன்)

தகவல்: குடும்பத்தினர்

(6456)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.